O-,892MSD, A
N 37
183857

நாடகத்தலைமை ஆசிரியர் ஸ்ரீலஸ்ரீ

டி. டி. சங்கரதாஸ் சுவாமி அவர்கள் இயற்றிய

# அல்லி சரித்திரம்



மதுரை புக்ஷாப்

கிருஷ்ண பிள்ளை

களால் வெளியிடப்பெற்றது

1934 [விலை 0—6—0

C , x92 ... A
M-6

நாடகத்தலைமை ஆசிரியர்

ஸ்ரீலஸ்ரீ

டி. டி. சங்கரதாஸ் ஸ்வாமி

அவர்கள் இயற்றிய

# அல்லி சரித்திரம்.

16 APR 1934
MADRAS

மு. கிருஷ்ண பிள்ளை,

பி. என். சி. பிரதர்ஸ் ஏஜண்டு

புக்ஸெல்லர்ஸ், அண்டு பப்ளிஷர்ஸ்,

மதுரை.

காப்பிரைட்] 1934 [விலை 0–6–0

183857

183857

மதுரை
விவேகாநந்தா பிரஸ்
1934

# முன்னுரை.

[illegible] என்னால் இயற்றப்பெற்ற சரித்திரங்கள் ஒவ்வொன்றிலும் [illegible]த்திற்குத் தகுந்தபடி வர்ணமெட்டுகளைத் தெரிந்தெடுத்து, இராகதாளத்துடன் பாட்டுக்களமைத்து சந்தங் குறையாமல் எழுதி முடித்தபின்னர், எனது மாணவர்களால் ஒவ்வொரு இடங்களிலும் நடத்திக்காண்பித்து நன்கு ஆமோதிக்கப் பெற்றவை என்பது இப்பெயரான் கூறாமலே இனிது விளங்கும்.

புகழேந்திப் புலவரால் வரையப்பெற்ற அல்லிராணி மாலையை, முதன் முதலில் என்னால்தான் நாடகமாக நடத்திக் காண்பிக்கப்பட்டது. நிற்க, அடிமுதல் அந்தம் வரையுள்ள விஷயங்கள் யாவும், திருமதுரை யம்பதியிலேயே நடந்திருப்பதால் இச்சரித்திரத்தின் பெருமையை நான் எடுத்துக் கூறவும் வேண்டுமோ? கிருஷ்ணனுக்கும் அருச்சுனனுக்கும் நடக்கும் சம்பாஷணைகள் முற்றும் படிக்கப்படிக்க ஆநந்தமே மேலிடும்.

நான் எழுதியுள்ள சரிதைகளில் இது இரண்டாவதாகும். இதைப் படிக்கும் ஒவ்வொருவரும் ஆனந்தமடையு மாறு சாட்சாத் சோமசுந்தரக் கடவுளை தியானஞ்செய்து கொண்டிருக்கிறேன்.

தூ. தா. சங்கரதாஸ்,
நாடக ஆசிரியன்.

## அடையாளப் பாத்திரங்கள்.

அரு—அருச்சுனன்.
அல்—அல்லி
கி—கிருஷ்ணன்.
கு—குறத்தி
வீ—வீமன்.
செ—செங்கமலம்.
ப—பவளச்சேனு.
மெ—மெல்லி.
ச—சகாதேவன்.
த—தருமர்.
பா—பாம்புப்பிடாரன்.
செ—செட்டி.

## நாடகப் பாத்திரங்கள்.

1. அல்லிராணி—மதுரை மஹாராணி.
2. பவளச்சேனு—முதலாவது மந்திரி.
3. செங்கமலம்—இரண்டாவது மந்திரி.
4. சிங்காரி—சேவகி.
5. அருச்சுனன்—பாண்டவ புத்திரன்.
6. கிருஷ்ணன்—நந்தகோபன் புத்திரன்.
7. முத்துமாணிக்கம் செட்டி—ஒரு முத்து வியாபாரி.
8. பாம்புப்பிடாரன்
9. குறத்தி
10. மெல்லி
11. கிழட்டுப்பார்ப்பான் மனைவி

} கிருஷ்ணனுடைய மாறு வேடங்கள்.

12. வீமன்
13. தருமன்
14. சகாதேவன்

} பாண்டு புத்திரர்.

இன்னும்—பூதங்கள் முதலானவைகள்.

### டி. டி. சங்கரதாஸ் சுவாமிகள்

இயற்றிய

# அல்லி சரித்திரம்.

### 1-வது களம்.

### மதுரை நகரம்.

அரு—பரமாத்மா! நாம் மதுரை வந்து சேர்ந்துவிட்டோம். நீர் இந்த இடத்திலேயே இருக்கவேண்டும். நான் நகரத்திற்குச் சென்று மீனாக்ஷியம்மனைத் தெரிசித்துவிட்டு வருகிறேன்.

கிரு—அருச்சுனா! நீ சென்று ஆகவேண்டிய காரியங்களையெல்லாம் முடித்துக்கொண்டு வா!

அரு—அப்படியே செய்கிறேன்.

(அருச்சுனன் நகரத்தினுள்ளே செல்லுகின்றான்.)

[முத்துவிற்கும் செட்டி ஒருவன் தான் அல்லிராணிக்கு அளிக்க வேண்டிய முத்தில் கலம்முத்துக் குறைவாகிறதென்று புலம்புதல்.]

(ஆ என் நல்லதங்கா என்ற மெட்டு)

இராகம்—முகாரி—தாளம்—ரூபகம்.

செ—
ஐயோ நான் என்ன செய்வேன்
அங்கு நான் ஏது சொல்வேன்
அளவில்லா முத்துப் போனதே
தெய்வமே தெய்வமே தெய்வமே (ஐ)

செ—சோமசுந்தரக்கடவுளே! ஒருநாளும் குறையாத முத்து இன்று குறைந்துவிட்டதே! அல்லி அம்மாளுக்கு இந்தச் சங்கதி தெரிந்துவிட்டால் என்மேல் கோபப் படுவாரே! அவருக்கு பதில் நான் என்னசொல்லுவேன்! ஏ மீனாக்ஷித் தாயே! நீதான் துணை.

வயிறு கொதிக்கிறதே
வாய்குழறி நிற்கிறதே
வகை யொன்றும் நானறியேனே
தெய்வமே தெய்வமே தெய்வமே

செ—நினைக்கும் பொழுதெல்லாம் என் வயிற்றில் தீப்பற்றுகிறதே இருக்கட்டும். இன்று முத்தைச் சரியாய்க் கொண்டு அளக் காதபட்சத்தில் என் தலை பறிபோய்விடுமே! இந்த வேளை யில் எனக்கு யார் உதவி செய்யப் போகிறார்கள்? நீயே கதி.

(இந்தச் சமயத்தில் அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை செய்து விட்டு அந்த வழியே வருகிறான்.)

அரு—அந்த இடத்தில் யாரோ ஒருவன் அழுதுகொண்டு இருக் கிறான் அருகிற் சென்று யாரென்று விசாரிக்கிறேன்.

இராகம்—ஸ்ரீராகம், தாளம்—ஆதி.

பல்லவி.

அரு— எந்த வூரோ நீ இங்கு சொல்—உனக்
கிந்தவித துன்பத்தையார்
செய்துவிட்டு அங்குசென்றார். (எ)

அநுபல்லவி.

பொருளைப் பறிகொடுத்து நிற்பவர்போல் நீர்தவித்து
இருகாத் தாலடித்து இப்படிப் பரதவித்து (எ)



சரணம்.

சொல்லி விடும் உண்மை யிங்கு
சொல்லிடில் நான் தீர்ப்பே னிங்கு
அல்லி யென்று அழுதீ ரிங்கு
அனைத்தையும் உரைப்பீ ரிங்கு (எ)

அரு:—ஐயா நீர் யார்? எதற்காகப் புலம்புகிறீர். அடிக்கடி அல்லி, அல்லி என்று சொன்னீரே! அந்த மங்கையார்? இவ்விதக் கொடுமையை உமக்குச் செய்தவன்யார்? என்னிடம் தெரிவி யும்; உமது குறையை நீக்கி விடுகிறேன்.

செ:—ஐயா! என் தலைவிதி நான் அழுது தவிக்கிறேன். உமக் கென்ன? நீர் வந்த சோலியைப் பார்த்துக்கொண்டு போம்.

அரு:—ஐயா! உம்மைப் பார்த்தால் ஒரு வியாபாரியைப் போல் காணுகிறது. நீர் கொஞ்சமும் ஒளியாமல் உமது குறையை என்னிடம் சொல்லும். உமது கஷ்டத்தை நிவர்த்தி செய் கிறேன்.

செ:—உண்மையாகத் தீர்ப்பீரா?

அரு:—உண்மையாகத் தீர்க்கிறேன்.

(பாட்டு) (இங்குவந்த எந்தன் தங்கை என்ற மெட்டு)

செட்டி:—ஆணித்தர முத்துக் குறை வானதினாலே
அந்த—அல்லி என்மேலே
கோபம்—ஆவாளப்பாலே—சொல்லி
கேளாளேயோ
யார் தடுத்தாலும் புலிபோலே
பாய்வாள்
கோலமுத்துக் காகஎன்னைக்குருடனுக்கிவைப்பாள்
என்—குலமும் போக்குவிப்பாள்
உயிர்—குலையத்தூக்கு விப்பாள்—அவள்
தேவராவியும்
கோபம் வந்திடில் நீக்குவிப்பாள்
கொன்று

(ஷை வர்ண மெட்டு)

பெண்டுபிள்ளை மாமன் சுற்றம் பெருகவாழ்ந்தேனே
உயிர்—பிரிய வீழ்ந்தேனே
என்—பெருமை தாழ்ந்தேனே—ஐயோ
பிடரியெரிய சனியனால் துன்பக் கடலிலாழ்ந்தேனே

செ:— ஐயா! நானிருப்பது இம்மதுரை. நான் ஒரு முத்து வியாபாரி. நான் இந்த மதுரையை அரசு புரியும் அல்லி அம்மாளுக்கு தினசரி முத்துக் கொண்டுபோய் அளப்பது வழக்கம். இன்றும் வழக்கம்போல் முத்தை எடுத்துக்கொண்டு செல்லுகையில் முத்துக் குறைகிறது. அளந்து பார்த்ததில் கலமுத்துக் குறைகிறது. இந்தவிஷயம் அந்த மஹாராணிக்குத் தெரிந்து விட்டால் என் மீது குற்றஞ் சாற்றி என் தலையைப் போக்கும்படி ஆக்கினைசெய்வார். அது தான் அஞ்சுகிறேன். ஆதலால் ஏழைமீது கிருபை செய்து:—

(பாட்டு) ஷை வர்ண மெட்டு

செ—ஐயா! இந்த நேர மிங்கே நீர் தானே
அந்த—அல்லி என் தலையைக்காக்க அருள் தானே
அன்பாகவே நீரளிப்பீர்
ஆதரித்து என்னைக் காப்பீர்
ஆஹா! இந்த நேரமிங்கே நீர் தானே (ஐ)

அரு—கலங்க வேண்டாம் கலங்கவேண்டாம்
கவலை நீ கொள்ளாதே
களிப்புடன் உன் குறை
தீர்க்கிறேன் பாரிதோ
காருண்யன் அருளாலே. (ஐ)

வ-ம்—செட்டியாரே நீர் கலங்கவேண்டாம். இதோ சிறிது நே[illegible]தில் எனது மைத்துனராகிய கண்ணபிரானை வரவழை[illegible] உமது குறையை ஒருநொடியில் தீர்க்கிறேன். ஆனால் ஒன்[illegible] அல்லி யென்று சொன்னீரே, அந்த மங்கை யார்? அவளுக்கு விவாகம் நடந்து விட்டதா? அவளுடைய வரலாற்றைக் கொஞ்சம் தெரிவிப்பீர்.



ஐயா! நீர் என் முத்துக் குறையாதிருக்கும்படி அநுக்கிரகம் செய்யும் பட்சத்தில் உடனே அன்னவள் வரலாற்றை எடுத்துரைக்கிறேன்.

(விருத்தம்)

அர்:-ராஜரீகத்தைச் செய்யும் நலமுள்ளா ளவளேயானால்
ஈசனால் குறைந்த முத்துக் கெதுவும்துன் பத்தைச் செய்யா
நாசமும் வந்ததென்று நடுங்கிநீர் புலம்பவேண்டாம் [ள்
நேசமாய் வீடுசென்று நிகரற்று வாழுவீரே

வ-ம்:—இப்பொழுது உமது முத்தை எடுத்துப் பாரும்.
(உடனே செட்டி முத்தைப் பார்த்துச் சரியாயிருப்பதினால் கீழே விழுந்து நமஸ்காரஞ் செய்கிறான்.)

செ:— ஐயா! என் முத்துச் சரியாக இருக்கிறது. ஆனால் உமக்கு இதற்குக் கைமாறு என்ன செய்யப்போகிறேன் என்ற கவலைதான் மேலிடுகிறது.

அர்:—செட்டியாரே! அந்த அல்லியின் வரலாற்றை மாத்திரம் தெரிவித்தாற் போதுமானது.

---

## நொண்டிச் சிந்து.

செ:— மதுரை மாநகரில் வாழும்—அந்த
மாது அல்லி ராணி புகழ் சொல்லுகிறேன் கேளும்
அழகினிற் சிறந்தவளே—வெகு
ஆங்காரம் இயற்கையிற் அமைந்தவளே
கல்வியிற் சிறப்புடையாள்—சிறு
காரணந் தெரிந்து கொண்டால் தொலைத்திடுவாள்
அழகிற் சிறந்த சிலையாள்—ஒரு
ஆடவரை யிதுவரை நேரில் பார்த்திலாள்
பருவதிசை யடைந்து விட்டாள்—நல்ல
பக்குவமான முக அழகுடையாள்
பார்த்தவர்கள் எங்குமே செல்லார்—அவள்
பாதமே கதியென்று பணிந்துமே நிற்பார்

ஆண்வாடை வெறுத்தவளே—திரு
அம்பிகையைத் தினந் தினந் துதித்திடுவாள்
இவைதான் அவள்பெருமை—இதை
இப்பொழுதே கேட்டாலெனைத் தொலைத்திடுவாள். (ம)

வ-ம்:—ஐயா! இந்த மதுரையம்பதியைப் பரிபாலித்து வரும் அரசி அழகிற் சிறந்தவள். ஆண் வாடை வெறுத்தவள். இவள் அழகுக்கு ஒரு ஆலயமே கட்டவேண்டும். ஈஸ்வரியைச் சதா காலமும் தியானஞ் செய்து கொண்டிருக்கும் புண்ணியவதி. இன்னும் விவாகமாகவில்லை. ஆண்வாடையே ஆகாதென்றால் விவாகஞ்செய்து கொள்ளுவாளா என்பதை நீரே யோசித்துக்கொள்ளும். நான் வந்து ரொம்ப நேரமாய்விட்டது. ஏழைமீது கிருபைசெய்து விடைதாரும், நான் முத்தைக் கொண்டுபோய் அல்லிராணியின் முன்னிலையில் அளக்கவேண்டும்.

அர்:— ஆண் வாடையே யாகாதா?

செ:— இன்னொரு முறை இப்படிக் கேட்கக்கூடாது. ஏனென்றால், என் தலை போய்விடும்.

அர்:— செட்டியாரே! சென்றுவாரும்.
(முத்து வியாபாரி சென்றுவிட்டான். அர்ச்சுனன் பரமாத்மாவைத் தியானஞ் செய்கிறான்.)

அர்:— தேவகி பாலா! தேவர்களனுகூலா! ஜெகம்புகழ் கண்ணிய சீலா! இந்த வேளை என் மீது அன்பு கூர்ந்து தெரிசனந் தந்தருளும்.

(கிருஷ்ணன் வருகிறார்.)

இராகம்—அடாணா. தாளம்—ஆதி.

பல்லவி.

கிரு:— அழைத்த விபரமென்ன
அர்ச்சுனா எனக்கிப்போது அன்புடனுரைத்திடுவாய் (அ)



அநுபல்லவி.

தழைத்த மரம் நிறைந்த சகல வளம்பெருகும்
தாரணி புகழ் மதுரை பரிந்து விரைவுடனே (அ)

சரணம்.

காவலர்கள் உனக்கென்ன பிழைகள்புரிந்தாரென்று
கவலை நீ கொண்டாயா—இல்லை
கானக வழியில் வந்த அசுரர் குலமதனைக்
கண்டு மருண்டாயா
ஆவி யெனையே யுந்தன் அருமைச்சகோதரனை
அடுத்து நினைவு வர அயர்ந்து மயங்கினையோ (அ)

---

வ-ம்:— அர்ச்சுனா! எதற்காகத் திடீரென்று என்னையிங்கு அழைத்தாய் தெரிவி.

அர்:— தெரிவிக்கிறேன்.

(அணைய ஜாலமினி)

அர்:— கண்ணனே யண்ணலே கார்மேக வண்ணனே
காத்தருள் செய்குவீர் காருண்ய புண்யனே
கிரு:— சொக்கர் நகர் வந்த சுமித்திரை நாதனே
சொல்லுவாய் சீக்கிரம் வந்த விநோதனே
வ-ம்:- சீக்கிரமாகத் தெரிவி. அழைத்ததின் கருத்தை.

(காதகனாகிய கஜகேது)

அர்:— அல்லி யென்ற ஒரு பெண்மணியாள்—முழு
அரசு புரிகிறாள் வீண் மதியாள்
கோபமே குடிகொண்ட துன்மதியாள்—அவள்
கொஞ்சமும் அஞ்சாத பாதகியாள் (அ)

விருதுகள் கட்டிய துன்மார்க்கி—வீண்
ஜெயக்கொடி காட்டிய தைநோக்கி
கத்தியா லறுத்துமே அதைத் தாக்கி—நாம்
நத்தியே செல்வோம் நகர் நோக்கி. (அ)

ஆண் வாடை யாகாத குணமுடையாள்—அதி
அகமுடன் அறிந்திடா மதிமடையாள்
எண் திசை முற்றினும் காற்படையாள்—அவள்
எண்ணியே பார்க்காத சிற்றிடையாள் (அ)

வ-ம்:- தேவகிபாலா! இது என்ன ஆச்சரியம். நம்போன்ற எத்தனையோ ஆண் சிங்கங்கள் இருக்க, கேவலம் ஒரு பேதை கல்வியிலும், வீரத்திலும், சாமர்த்தியத்திலுஞ் சிறந்தவளாகி, இந்த ராஜ்ய பாரத்தை அப்பேதையின் கீழடக்கி ஆளுவதென்றால், இதைவிட என்ன வேண்டும். இவை முற்றிலும் காதினால் கேட்டு நாம் இந்தக் கொடிகளையும், விருதுகளையும் அறுத்தெறியாது செல்வது நம்போன்ற புருஷர்களுக்கு அழகாகுமா! ஒருக்காலுமாகாது. ஆதலால் என்பேரில் கிருபைகூர்ந்து விடைதாரும். இதோ ஒரு நொடியிற் சென்று விருதுகளையும், கொடிகளையும் அறுத்தெறிந்து அந்த மாதின் மமதையை அடக்கி வருகிறேன்.

---

இராகம்—தர்பார். தாளம்—ஆதி.

பல்லவி.

இரு:— அவள் எப்படியிருந்தால் நமக்கென்ன—நாம்
இந்தயிடந் தன்னைத் தேடி
வந்தது தீர்ந்தது போவோம். (எ)

அநுபல்லவி.

குப்புறக் கிடந்தழுதோன் செப்பியே படியேஅல்லி
இப்புவியை ஆள்வதினால் தப்பிதமொன்றுமில்லை (எ)

வ-ம்:— அர்ச்சுனா! தீர்த்த யாத்திரை செய்யவந்தோமேயன்றி ஜெயக்கொடியறுக்கவரவில்லை. தவிர, "குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்ளுவதுபோல்" செய்யவேண்டுமென்கிறாய். இந்திரப் பிரஸ்தத்தைப் பரிபாலித்து வந்த உன் தந்தையாகிய பாண்டுவிற்குப் பின் ஐவர்களா நீங்கள்,



சரணம்.

தன்னுடை தந்தையர்கள் முன்னுமாண்ட தேசத்தையே
தானுமரசாக்ஷி செய்யக் கண்டாய்—அது
தானே யல்லாமல் நமது ஜோலிக்கு வரவில்லையே
தையல் மீது ஏனோ சினங் கொண்டாய்

வ-ம்:—ஏன் நீ கோபிக்க வேண்டும். இந்த மதுரையம்பதியைபரிபாலித்து வந்த பாண்டியனுக்குப் புத்திரனில்லாததினால் தன் புத்திரியாகிய இந்த அல்லி என்னும் பெண்மணிக்கு மகுடாபிஷேகம் செய்திருக்கிறார்கள். மேலும்

(முன்பாட்டின் தொடர்ச்சி)

கன்னியர்கள் பூமியாளக் கூடாதென மனுமுறையில்
கண்டிருக்கிறதோ பாரில் பெண்டீரு மெதிரே நேரில்

வ-ம்:—பெண்கள் இராஜ்யபாரஞ் செய்யக்கூடாதா? எந்தக் காரணத்தைக்கொண்டு என்முன் இப்படி அநீதியான வார்த்தையைத் தெரிவித்தாய். அதை எனக்கு விளக்கிக்காட்டு.

---

பாட்டு

(அச்சாரே பானுமேரா என்ற மெட்டு)

அர்:— நேரிலவளைப் பாராதிவ்வூரை விட்டு வரமாட்டேன்
நிச்சயம் நிச்சயமிது மைத்துனரே நான் (நே)

நீரென்ன சொன் னாலுமவ்வல்லி
நேர்மை காணாதவனோ காண்டீபவில்லி
பாராமற்போனாலும் ஊரார்வசைசொல்லி
பழிப்பாராகையினாலே சகிக்கேனினிமேலே
வசைக்காளாக்காமல் கிட்டிக்கேளு மென்துரையே (நே)

வானமழை தடுக்க மலையை முன்னெடுத்தாய்
மாயமராமுங்கன்றும் மடியவும் தொடுத்தாய்
கூனல் நிமிர்த்தவட்குக் கோலமுங் கொடுத்தாய்
குறித்தொருத்தியை வர வழைத்திடவருத்தமோ
அல்லியென்றிடும் அம்மாதையழைத்திடுமையா
அல்லாதுபோனால் நீரொன்றுஞ் சொல்லவேண்
[டாம் போவீரையா (அல்)

வ-ம்-ஐயனே! தங்களிஷ்டம். ஆனால் ஒன்று, அல்லி யென்னு பெயராழகைப்பற்றிக் கேட்டமாத்திரத்தில் அம்மாதை பார்க்கவேண்டுமென்ற அவாமேலிடுகிறது. அருள்புரிவீ

கிரு:— அவளைப்பார்ப்பதென்றால் எளிதில் முடியாது. அந்த அல்லி என்னும் பெண்:—

கபரதரகா—என்ற மெட்டு.

பல்லவி.

அரண்மனையில் இருப்பவளைப் பார்த்திட ஆகுமோ
ஆகாது வாவா நம் நகரம்போய்ச்சேரலாம் (அ)

அநுபல்லவி

கட்டென்ன காவலென்ன கரிபரி என்ன
காலாள்தேர் முதலான சேனைகளென்ன
அட்ட திசையி லவள் அதிகாரமென்ன
ஆகையினால் நாமனுக எதும்வழி கிடையாது (அ)

வ-ம்- இதற்கு இன்னுமொரு தந்திரமிருக்குது. அதாவது,

சரணம்.

பல பல விலங்கினம் இனங்களுண்டாக்கி
பயிரை யழிக்கச்செய்வேன் வனமதை நோக்கி
கொலைசெய்து வேட்டையாட வருவாளே நோக்கி
கொஞ்சமும் அஞ்சவேண்டாம் இங்கேயும் நீ வாட
[வேண்டாம் (அ)

வ-ம்- மிருகங்களை இதோ படைத்தனுப்புகிறேன். நேரில் பார்க்க முடியாது. அநேக மிருகங்களை ஏவி குடிகளிட்ட பயிரை அழிக்கும்படி செய்கிறேன். அப்பொழுது அல்லி யிடம் குடியானவர்கள் முறையிடுவார்கள். உடனே அவள் வேட்டையாடக் காட்டிற்கு வருவாள். அப் பொழுது நீ பார்த்துக்கொள்ளலாம்.

## 2-வது களம் சபை

## அல்லி தேசவிசாரணை.

(பாட்டு)

ஆடல்பாடல்கூடிய—என்ற மெட்டு

அல்:— மாதுபாக மானவா வானவா வந்தனம்
மாமறை புகழ் சொல்லு மாசிலாத்தாயகா
வாகாசிற்பரா தற்பரா வாமனோகரா



வடிவநிலா சிறியநிலா
மதிபுனைவாய் நதியணிவாய்
மாரனீருடி யோய் மாலயன்தேடி யோய்
மங்களா சங்கரா
கானமேவுரஞ்சிதா கந்தவேளின்பிதா
காலனை விழமோது கருணாகராசிவா
காலமேற்றவா நீற்றவா கட்கடாக்ஷவா
கரியுரியாய் அரியறியாய்
விரிசடையாய் புலியுடையாய்
கால்கழுங்கூரரா கங்கணம் பூணரா
காரணா ஆரணா

---

[சேடிகள் அடி பணிதல்.]

அணைய ஜாலமீனி—என்ற மெட்டு.

சே:— அம்மணி தேவியே அடியினைப் பணிந்தோமே
ஆதரித்தருள் செய்து போற்று மின்னேரமே

அல்:— அமருங்கள் அமருங்கள் அன்பான தோழிகாள்
அஞ்சாமல் என்னிடம் இன்பமாய்க் கூறுங்கள்

சே:— வந்தோம் பணிந்தோம் அமர்ந்தோம் பயந்தோம்
வரும்வினை தெளிவுடன் உணர்ந்திடத் துணிந்தோம்

அல்:— அன்புடன் வினவிட ஆவல்நான் கொண்டேனே
ஆங்காங்கு நடந்ததை அறியமுன் வந்தேனே

---

சே:— அம்மணி நமஸ்கரிக்கின்றோம்.

அல்:— சேடிகளே அமருங்கள். மீனும்பிகையின் கிருபா கடாக்ஷத் தினால் இதுவரை நமது ராஜ்யபாரம் வெகு நீதியோடு நடந்துவந்ததுடன் மீண்டும், நமது ராஜ்யத்தின் சீர்திருத் தத்தைப்பற்றி வினவி யறியப் பிரியப்படுகிறேன்.

நாரதரே ஞாயமோ—என்ற மெட்டு.

இராகம்—பியாக் தாளம்—சாப்பு.

பவளச் சேனை மந்திரி—இப்
பாரினி லுள்ளதே வாலயங் கள்தோறும்
பூஜை செய்கின்றாரா. (ப)

காத்துநின்ற நாரை—என்ற மெட்டு.

அந்தணர் யாவரும் ஆறுகாலந்தோறும்
தந்தமேள வாத்திய கோஷமா யெல்லோரும்
செந்தமிழ்த் தேவாரம் திருப்புகழலங்காரம்
செப்புமுறை ஒப்பிடவே தப்பிதமில்லாம லவர் (ப)

வ-ம்:—பவளச்சேனா! ஆறாதாரத்திலு மேலாகிய இம்மதுரையம் பதியில் ரவியைப்போல் பிரகாசித்துக்கொண்டிருக்கும் மீனாக்ஷியம்மன் சந்நிதானத்திலும் மற்றுமுண்டான சகல ஆலயங்களிலும் மேளம், சின்னம், தேவாரம், திருவாசகம், இன்னுமுண்டான சகல வைபவத்துடன் அனுதினமும் காலாகாலங்களில் சரிவர ஆறுகால பூஜை செய்து வருகின்றார்களா?

பவ:— அம்மணி! தாங்களுரைத்தவாறே எல்லோரும் பயத்துடனும் சகல வைபவத்துடனும் பணிவாய் நடத்தி வருகின்றார்கள்.

அல்:—பவளச்சேனா! ஆனந்தித்தேன். எல்லாம் நம் அங்கயற்கண்ணியின் கிருபையே!

இராகம்—பியாக் தாளம்—ரூபகம்.

நஞ்சை புஞ்சை பயிர்கள் மேவ
நல் மழையும் பெய்தனவா
அஞ்சேலென வந்துநீரும்
ஆறு ஏரி பெருகியதா.

வ-ம்:—பவளச்சேனா! நமது நாட்டிலுள்ள நஞ்சை புஞ்சை இவைகளுக்கெல்லாம் போதுமானபடி மழை பெய்து மிகுத்த நீர் வைகைநதி, ஏரி இதுபோன்ற தடாகங்களிளெல்லாம் பெருகி நிற்கிறதா?

பவ:—அம்மணி! இந்த வருஷம் போதுமானபடி மழை பெய்தது. அகவிலையும் சௌகரியமா யிருக்கின்றது.



இராகம்— மோகனம் தாளம் —ஆதி.

பல்லவி.

அல்:— வாணிபஞ் செய்யுமவர்
காணி குறைவி ல்லாமல்
வர்த்தகஞ் செய்கின்றாரா (வா)

அநுபல்லவி.

வாங்கியவிலைக்குச்சொற்ப லாபம் வைத்துமே விற்று
ஓங்கிய துலாவதில் ஒன்றுபோலே நிறுத்து
உறத்த ஒலி யில்லாமல் சிறுத்த குரலுடனே (வா)

வ-ம். வர்த்தகரெல்லாம் தாம் வாங்கிய விலைக்குச் சொற்ப லாபம் வைத்து சரியாகத் துலாக்கோலால் நிறுத்தும் அளந்தும் சரிவர வாணிபஞ் செய்கின்றாரா?

பவ:— அம்மணி! இது விஷயத்தில் நிரம்பப் பயந்து சொற்ப லாபத்திற்கு சரிவர விற்று வருகிறார்கள்.

(காதனாகிய கஜகேது)

அல்:— எதிர்சமர் செய்திடும் வீரரவர்
கதிர் முனைக் கருவியால் பழகுறாரா
எதிராடி வருவோரை முதுகடித்து
தாக்கிடும் வகைதனை அறிந்தனரா—வந்தோர்
ராஜ்யமதைப் பெறத் தெரிந்தனரா (எ)

வ-ம். நமது தேசத்தின் மீது எதிரிகள் படையெடுத்துவாராதபடி சமர் செய்வதற்கு வேண்டிய சகல வித்தைகளையுந் தெரிந்து வருகின்றாரா.

பவ:— அதில் யாதொரு குறைவில்லை.

குடிகள் வருகிறார்.

கு:— நாங்கள் என்ன செய்யப் போகிறோம். மிருகங்கள் வந்து எங்களுடைய பயிர்களை எல்லாம் அழித்து நாசப்படுத்துகின்றதே! மகாராணி! நீர் தான் காப்பாற்றவேண்டும்.

அல்:— பவளச்சேனு! வெளியில் ஏதோ இரைச்சல் கேட்கிறது. இன்னதென்று தெரிந்து வருவாய்.

[பவளச்சேனு வெளியே போய் வருகிறுள்]

ப:— அம்மணி! குடிகளிட்ட பயிர்களை மிருகங்கள் வந்து அழிக்கிறதென்று குடிகள் வந்து முறையிடுகிறுர்கள்.

அல்:— பவளச்சேனு! குடிகளுக்கு வருந்துன்பத்தைத் தீர்க்க வேண்டியது நமது கடமை. குடிகளைச் சென்று வரும்படி கட்டளையிட்டேன் தெரிவிப்பாய்.

ப:— அப்படியே! செய்கிறேன்.

அல்:— சேவகி! இங்கே வா. நீ சீக்கிரமாகச் சென்று கொடிய விலங்கினங்களைத் துலைப்பதற்குத் தகுந்த,

பாட்டு

மணிப்புரஞ் சென்று—என்றமெட்டு.

வேட்டைக்குத் தகுந்த வில்லம்பு ஈட்டி
வேல்தடி ஆயுதங்கள்
தாட்டிகமாகவே ஓட்டிவதைத்திட தடிகளுடன் வாள்கள்
இரும்புதட்டி வலைகள் எட்டிப் பற்றுங் கடிநாய்கள்
துருப்புடனே கொடிகள் வில் துப்பாக்கிப் போர்வீரர்கள்(வே)

வ◦ம்:— நான் சொல்லிய பிரகாரஞ் சென்று வேட்டைக்குத் தகுந்த சகலவிதமான ஆயுதங்களுடனே வேட்டைக்காரர்களையும் மற்றுமுண்டான நாய் துருப்புகள் வலைகள் இவைகளுடன் வந்து சேரவேண்டும்.

## 3-வது களம்.

## அல்லி வேட்டையாடுதல்.

பாட்டு.

கட்டியகட்டுகள் பட்டுப்பட்டென்று—என்ற மெட்டு

அல்:— கட்டப்பாரை கையில்கொண்டு குழிதோண்டி
காட்டுக்கழிகள் ஊணி நட்டுங்கள்
காண்டாமிருகங்குதித்தோடிப் போகாமற்
கானமுழுதும் வலைகட்டுங்கள்



கொட்டு பிரிந்தவல் பம்பைமுரசு
கொடிய உறுமிபறை கொட்டுங்கள்
கோரமிருகங்கள் ஓடிவிடாமற்
குடல்கள் சரியக் குத்தி வெட்டுங்கள்
தப்பட்டை கொட்டுங்கள் வேட்டு முழக்குங்கள்
தாளங்கள் போட்டு சூழ்ந்து நில்லுங்கள்
தாவிமிருக மகன்றோடிப் போகாமற்
சார்ந்து உங்கள் வலியால் வெல்லுங்கள்
வேலாலெறியுங்கள் வாளாலெறியுங்கள்
வில்லை வளைத்தம்பு எய்திடுங்கள்
வேட்டைநாயேவுங்கள் ஈட்டியால்குத்துங்கள்
வீரப்புலிதனைக் கொய்திடுங்கள்

[இந்தச் சமயத்தில் கிருஷ்ணன் அர்ச்சுனனுக்கு அல்லியைக் காண்பிக்கிறுன்.]

கிரு:— அருச்சுனு! பார்த்தாயா! இவள்தான் அல்லி.

அரு:— இவள்தானு? அல்லி!

[என்று சொல்லிக்கொண்டு எட்டிப் பிடிக்கப் போகிறுன். கிருஷ்ணன் தடுக்கிறுன்.]

கிரு:— அருச்சுனு! என்ன காரியஞ் செய்தாய். நானும் உன்னேடு தீர்த்தயாத்திரைக்கு வந்தேனே இருக்கட்டும்; அல்லியைப் பார்த்தாய் விட்டதல்லவா? வா நம் நகருக்குச் செல்லலாம்.

(பாட்டு)

(கண்மணியே தன்மையுள்ள என்ற மெட்டு)

அரு:— அல்லியென்னும் பேருடைய மெல்லியிவள் மீதுமையல்
ஆசைமிக மீறுதையா ஆதலினுலேது செய்வேன்

கிரு:— ஆசைமீறுகின்றதென பேசுவதாலாபமென்ன
ஆகையால் போகலாம்வா அர்ச்சுனு நம்தேசத்துக்கு

அரு:—அச்சுதனே ஆயர்குல பச்சைநிற கோபாலனே
அந்தமாதை எந்தனுக்கு
அன்பாய்ச்சேர்த்து வைப்பாய் நீயே

கிரு:— எனக்கு நல்ல வேலை சொன்னாய்
மனக்குறையால் மையலானாய்
ஈதுதர்மநீதியல்ல இந்த்ரபிரஸ்தம்போவோம்வாராய்

வ-ம்:—அருச்சுனா! முதலில் அல்லியைப் பார்த்தால் போதுமென்று தெரிவித்தாய். அதன்படி உனக்குக் காண்பித்தேன். இப்பொழுது அல்லியைக் கல்யாணஞ் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறாய் அது என்னால் முடியாத காரியம். நீ இப்பொழுது அஸ்தினா புரத்திற்கு வருகிறாயா? இல்லையா?

பாட்டு

நகர்வளம் போய்ப் பார்க்கவேண்டும்—என்ற மெட்டு.

அரு:—மாலை சூட்டாமல் வரலாகுமா
வாதுநீரோதாமல் மாதை நான் நோக்கியே உறவாடி (மா)

மாயவனே யுந்தன் சோதனையாகுமா
சகாயம் நீர் செய்யாமல் வேதனைபோகுமா
கண்ணாகார்வண்ணா நான் அல்லியெனும்மாதை சொந்த
[மனையாக (மா)

வ-ம்:—பரமாத்மா! என்னவார்த்தை தெரிவித்தீர்! நானிதுவரை எத்தனையோ பெண் மணிகளைப் பார்த்திருக்கிறேன். இது மாதிரி ஒரு மங்கையைப் பார்த்ததில்லை. இவளைப் பார்த்தது முதல் என் மனம் அவள் மையலிற் பாய்ந்து விட்டது. இனிமேல் எவர் சொன்னாலும் கேட்கமுடியாது "அல்லி"யெனும் அந்தப் பெண்மணியைத் திருமணஞ் செய்யாமல் ஒரு அடியெடுத்து வைக்கமாட்டேன்.

கிரு:—பேஷ்! நன்றாயிருக்கிறது. புண்யக்ஷேத்திரங்களுக் கெல்லாஞ் சென்று:—



(பாட்டு)

தீர்த்த—யாத்திரை வந்த பலனிதுவோ
நிதியோவென் கதியோவுன் மதியோவீண் வாதுரைவேண்
[டாமே (தீர்)

குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்ளவா வந்தாய்
களிப்புடன் கலியாணம் செய்திடத்துணிந்தாய்
காலம் வீண்போகாது அவள் சுபாவமும் பொல்லாது
அறிந்திடு (தீர்)

வ-ம்:—உன்னோடு நானும் போக்குப்புகலில்லாமல் தீர்த்த யாத்திரைக்கு வந்தேனே! இனிமேல் உன்பாடு அவள்பாடு எனக்கொன்றும் தெரியாது. நான் உன் அண்ணனிடஞ் சென்று சங்கதியைத் தெரிவித்து விடுகிறேன். இதோ செல்லுகிறேன் இந்திரப்பிரஸ்தத்திற்கு.

அரு:—சென்றுவாரும் நமஸ்கரிக்கிறேன்.

[கிருஷ்ணன் தனக்குள்ளே இவனை விட்டுவிட்டு நான் செல்லலாகுமா? செல்லலாகாது.]

கிரு:—அருச்சுனா! நான் சொல்லுகிறபடி கேள். அந்த அல்லியைக் கலியாணஞ் செய்யவேண்டுமென்றால் நான் சொல்லுகிறபடி கேட்கவேண்டும். உன்னால் முடியுமா? தெரிவி.

அரு:—உம்முடைய அருளிருக்கும்போது ஏன் என்னால் முடியாது. சீக்கிரமாகத் தெரிவியும் செய்கிறேன்.

கிரு:— நீ சீக்கிரமாகச் சென்று அந்த அல்லியின் கைவிரலில் அணிந்திருக்கிற மோதிரத்தைக் கழற்றிக்கொண்டு வந்து தரவேண்டும். இல்லையேல் நடப்பேன் பிரயாணம்.

அரு:—அதற்குத் தகுந்த உபாயஞ் சொல்லும்; அதன்படி செய்கிறேன்.

கிரு:— நல்லது கலியாணஞ் செய்யவில்லையா என்றால் உன் வீட்டில் பெண்ணிருக்கிறதா என்று கேட்கிறாய். சரி இருக்கட்டும் தந்திரஞ் சொல்லுகிறேன். அதாவது;

பாட்டு

(சத்தியம் நீர் செய்தால் நம்புவேன் என்றமெட்டு)

பல்லவி

கிரு:— மோதிரம் நீ கொண்டு தருவாய்—அவள்
விரலி லணிந்திருக்கும் அழகு நிறைந்த ஒரு (மோ)

அனுபல்லவி

இவ்வுரு மாறியே பேடிபோலெடுப்பாய்
இந்த அல்லியிடத்தில் சேடிபோல் நடிப்பாய்
அவளிங்கு சயனிக்க கதையொன்று விடுப்பாய்
அயர்ந்து தூங்கும் வேளையில் கணையாழி எடுப்பாய் (மோ)

வ-ம்:—அர்ச்சுனா! அல்லி வேட்டையாடுமிடத்தில் இவ்வுருவை மாற்றி பேடிரூப மெடுத்து அந்த அல்லிமுன் சேடிபோல் நடிக்கவேண்டும். அந்தச் சமயம். அல்லி களைப்பினால் அயர்ந்து நித்திரை செய்வாள். நீ சமயம் பார்த்து அவள் கை விரலி லணிந்திருக்கிற மோதிரத்தைக் கழற்றிக்கொண்டு வந்து என் கையிற்றரவேண்டும். அப்படித்தந்தால் உடனே கலியாணம்.

அரு:— இது உண்மைதானா?

கிரு:— நீ போகும்பொழுதே உண்மைதானா? நன்மைதானா? என்கிறாய். சந்தேகம் வேண்டாம் போய் வருவாய்.

அரு:— இதோ செல்லுகிறேன்.

[அர்ச்சுனனும் கிருஷ்ணனும் சென்றுவிட்டார்கள்]

## 4—வது களம்

இராகம் – அடாணா—தாளம்—ஆதி

பல்லவி

அல்:—ஓடுதே! சிங்கம்! ஓடுதே! மான் ஓடுதே!
யானை—திரண்டு ஒருபுறமாய் மிரண்டுபலதிசையில்

அநுபல்லவி

பாயும் புலியினங்கள் பரிந்து விரைவுடனே
பார்த்துப்பார்த்துமே நம்மை எதிர்த்து ஜெயித்திடாமல் (ஓ)



சரணம்.

துள்ளிக் கழுதைப்புலிக் கள்ளி மீதினிற் பாய்ந்து தள்ளி
அல்லியாளைக் கண்டதுவும் சொல்லியே திரண்டுருண்டு
புள்ளிமா னினங்க ளெல்லாம் சல்லியஞ்செய்துமேயங்கு (ஓ)

---

[பேடி ரூபங்கொண்டு அருச்சுனனும் அல்லியுடனே நின்றுகொண்டு சேடிபோல் நடிக்கிறான்]

அல்:—சேடிகளே! பார்த்தீர்களா? மிருகங்களெல்லாம் எங்கே? என் பெயரைக்கேட்ட மாத்திரத்தில் இந்த மிருகங்களெல்லாங் கிடு கிடு கிடு வென நடுங்க வேண்டாமா? இருக்கட்டும் எனக்கு ஒருவிதமான அலுப்புமேலிடுகிறது. காரணம் இன்னதெனத் தெரியவில்லை.

பாட்டு

பார்ஸீ நோட்

அம்பிகா! அம்பிகா!! அம்பிகா!!!
அம்பிகா அம்பிகா அம்பிகா
உடல் வலியினால் மிக வருந்தியே
நொந்து நின்றேன் (அ)

கால்கைகள் சோருது பதறுது
தாகமேல் ஆகுது உயிர்போகுது
படுந்துயரதை மனமகிழ்வொடு தீர்த்தருள்வாய் (அ)

இரு—கால்கள் மிகவும் ஓய்ந்துபோகுதே (க)

கருத்துடன் சகிகேளடி
என்—காலைச்சற்று பிடியடி
வருத்தந்தீரடி நான்கொண்ட
வருத்தந்தீரடி
இந்த—வாதை வேட்டையால் வந்ததாமடி (க)

வ-ம்:—சேடிகளே! என்னால் நிற்க முடியவில்லை. நான் கீழே படுத்துக்கொள்கிறேன். நீங்கள் என் உடம்பைப் பிடித்து எனக்கு நன்றாய் நித்திரை வரும்படி ஒரு கதையுஞ் சொல்லுங்கள்.

அரு:—நான் சொல்லலாமா?
அல்:—நீ தான் சொல்லு.

[அர்ச்சுனன் தன் வாலாற்றையே கதையாகத் தெரிவிக்கிறான்]

## நொண்டிச் சிந்து.

அரு:—அம்மணி சொல்லுகிறேன்—ஒரு
அழகுள்ள விசித்திரக் கதையை நானே
இந்திரப்பிர சித்த மென்றோர்—நகர்
இங்கிருந்து வெகுதொலை இருக்குதம்மா
அதையொரு மன்னன் ஆண்டார்—அவரை
அன்புள்ளநற் பாண்டென்று உரைத்திடுவார்
இவருக்கும் ஐந்து புதல்வர்—அவர் பெயர்
தருமன் பீமன் நகுலன் சகாதேவனும்
அவர்களில் பார்த்தனொருவன்—துரோபதையை
அன்புடனே மாலைசூட்ட வில்லைவளைத்தான்
அழகிற் சிறந்த உருவன்—அவன்
ஆய்ந்தாய்ந்து பார்த்துப்பேசுந் தன்மைவாய்ந்தவன்
வில்வித்தையில் தேற்சி பெற்றவன்—உலகில்
விருப்பங்கொண்ட சிலமாதை புணர்ச்சி பெற்றவன்
அல்லிக் கிசைந்த கணவன்—இந்த
ஆங்காரக் குணமதை அடக்கியாள்பவன்
அல்லிக் கிசைந்த கணவன்.

[என்று சொல்லிவிட்டு கணையாழியைக் கழற்றிக்கொண்டு ஓடிவிடுகிறான்.]

---

பாட்டு

ஆரடா ஆரடா—என்ற மெட்டு.

ஓடாதே ஓடாதே ஓடாதே ஓடாதே ஓடாதே நீ நில்லடா
கூடாத செய்கைக்குடன் பட்டு வீண் கதை
கூறியதன்மை யெல்லாமறிந்தேனதை
ஏடான ஓலையை எமன் கிழித்ததை
எண்ணாததாலுனக் கென்னடாயோக்யதை
நில்லடா நில்லடா நில்லடா நில்லடா நில்லடா; சொல்லுகிறேன்



[அல்லி அடங்காத கோபங்கொண்டு தன் வேலையாட்களைக் கோபிக்கிறாள்]

பாட்டு

முன்னமே சொன்னேனடி—என்ற மெட்டு.

துக்கடா

அல்:— கேளடி செங்கமலம்—மிகு
கீழ்மையான கேவலம்
கேடடைவானொரு பாதகனானவன்
கிட்டிவந்த சபலம்
கள்ளனொருவனடி—வந்த
காரணமறியேனடி—தன்
கைகளினாலென்றன் காலைப் பிடித்துக்
கதையொன்று சொன்னானடி
தேடிப்பிடிக்கவேணும்—சித்
திரவதை செய்யவேணும்—பலம்
சேருமென் வீரமும் ராஜாங்க நேர்மையுஞ்
சீக்கிரங் காட்டவேணும்

183857.

வ-ம்:—சேடிகளே! நீங்கள் எங்கே சென்றிருந்தீர்கள். எல்லாருமிருந்தும் இந்த மாதிரி திருட்டு வேஷம் போட்டு, என்னிடம் பலவாறு வீண் வார்த்தைகளைப் புகட்டிச்சென்றானே! என் கையிலகப்பட்டிருப்பானாகில் அவன் கதி அதோ கதி தான்! நீங்கள் சீக்கிரமாகச் சென்று அந்தச் சண்டாளன் எங்கு சென்றிருந்தாலும் சரி, முன்பின் விடாமல் தேடிப் பிடித்து அழைத்து வாருங்கள்.

சே:— அம்மணி! அப்படியே செய்கிறோம். உத்திரவு தாருங்கள்.

---

## 5-வது களம்.

சத்தியம் நீர் செய்தால்—என்ற மெட்டு

பல்லவி.

அரு:—கணையாழி நான் கொண்டு வந்தேனே
கண்ண பிரானே. (க)

அநுபல்லவி.

பேடி யுருவெடுத்துச் சேடிபோல் நடித்தேன்
ஓடியே வில்லின் அம்பை கைதனிற் கொடுத்தேன்
கடிந்து மொழியும்படி கதை யொன்று விடுத்தேன்
கணையாழி யெடுத்ததும் உமையிங்கு அடுத்தேன். (க)

வ-ம்:—கண்ணபிரானே! நீர் சொல்லியவாறு அல்லியிடஞ் சென்று, கணையாழியைக் கொண்டு வந்து விட்டேன். இதோ பெற்றுக்கொண்டு, மணமாலைக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யும்.

கிரு:— அர்ச்சுனா! நீ மஹாபுத்திசாலி. இரவில் நித்திரை செய்தாயா! இல்லையா? சீக்கிரமாய்த் தெரிவி.

அரு:—பரமாத்மா! கேலியா செய்கிறீர்? உமது தந்திரத்தை அறிவேன்.

பாட்டு.

இராகம்—எதுகுலகாம்போதி தாளம்—ரூபகம், ஆதி.

கிரு:— தாகவிடாய் தீருதற்கு தண்ணீர் தந்தால்நானுனக்கு (தா)
தையலாளல்லியைமணஞ் செய்துவைப்பேன்விஜயா
சஞ்சலம்நெஞ்சிற்கொள்ளாமற் என்சொல்லுக்குமிசையா
தாளமுடியாதென்னால் சோகமானேனதனால்
ஆவியகலு முன்னால்போய் வருவாயே இன்னாள் (தா)

வ-ம்:—அர்ச்சுனா! எனக்கு தாகம் அதிகமாயிருக்கிறது. எப்படியாவது எனக்கு ஜலம் கொண்டுவந்து கொடுப்பாயானால் அப்பால் உனக்கு கல்யாணம் செய்துவைக்கிறேன் போய் வா சீக்கிரம்.

அரு:—சுவாமி! தங்களிஷ்டப்படி இந்தக்காட்டில் தேடி தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தவுடன் வேறு பதில்மொழியொன்றுஞ் சொல்லாது கல்யாணஞ் செய்துவைக்க வேண்டும் போய்வருகிறேன். (போகிறான்)



கிரு:—(தனிமொழி) அர்சுனனோ! எனக்கு ஜலம்கொண்டு வருவதாகப்போகிறான். இவன் ஜலம் எடுக்கும் குளத்தில் அல்லியின் உருவம் அவனுக்குத் தோன்றும்படி அல்லியைப் போல் ஒரு சித்திரமெழுதி குளத்துக்கரையிலிருக்கும் மரத்தின் கிளையில் கட்டிவைத்து பல பல கேலிவிளையாட்டுகளைச் செய்து முடிவில் அல்லியை மணமுடித்து வைக்கிறேன்.

---

## 6-வது களம்.

அல்லிக்குளம்.

அரு:—இதோ! ஒரு குளந்தெரிகிறது. அதில் நமது மைத்துனர்க்கு ஜலம் எடுத்துக்கொண்டு போவோம். (குளத்தைப் பார்த்து) ஆ! என்ன ஆச்சரியம்! நமது மைத்துனர், என்னைத் தண்ணீர் கொண்டுவர அனுப்பிவிட்டு அல்லிமாதையும் எனக்கு முன்னாடியே இங்கு அனுப்பியிருக்கிறார். கண்ணே! அல்லிமாதே!! ஏன் வெட்கப்படுகிறாய்? இங்கு யாருமில்லை வா.

பாட்டு.

எக்குலத்திலேயுதித்தாய்—என்ற மெட்டு.

தண்ணீரிலேயிருக்க தையலரே காரியமேன்-சொல்லு-உன்னால்
தாயை அண்ணன் தம்பிமாரை நான் மறந்தேன் உன்மனமோ-
கல்லு

என்னைப்போலே உந்தனுக்குஎங்குகிடைப்பான்கணவன்மானே-நீ
இந்தவித தொந்தரவு தந்துமனம் நோகச்செய்வதேனே

வ-ம்- ஏ பிரியநாயகி! ஏன் என்னை இவ்வித அவஸ்தைக்குள்ளாக்குகிறாய்.

பாட்டு.

என்னையுமடிப்பவர்கள்—என்ற மெட்டு.

வாடி வாடி அல்லிமாதே மஞ்சமீது கொஞ்சிடுவோம்
மலர்மாலைகள் சூடிடுவோம் மருவிவிளையாடிடுவோம்
மோடி நீ செய்வதேனடி மோகமாகினேனானடி
மோசமென்ன மாகுமோடி முத்தமொன்று நீ கொடடி
சித்தமும் மயங்குதடி பித்தமிங்கு கொண்டேனடி
சீக்கிரமிந்தத் தண்ணீரை நீக்கியெந்தன் சொல்லைக்கேட்டு(வா)

---

[கிருஷ்ணன் அல்லி உருவத்தை மரத்தினின்றும் அவிழ்த்து விடுகின்றார்.
அருச்சுனன் குளத்தில் குதித்து அல்லிமாதை தேடிக் காணாது
கரையில் ஏறிநின்று]

அரு:—இதுவென்ன மதிமோசம் போனோம்! அல்லியானவள் தண்ணீரி லிருக்கிறாளென்று தேடிப்பார்த்துங் காணோமே! வீண்மயக்கம். நல்லது, நேரமாகிறது. கண்ணனோ தாகத்தால் வருந்துவார். சீக்கிரம் ஜலத்தை எடுத்துக்கொண்டு போவோம்.

---

## 7-வது களம்.

### கானகம்.

அரு:—மாதவா! இதோ தண்ணீர்கொண்டு வந்திருக்கிறேன். தாகந் தீர்த்துக் கொள்ளுங்கள்.

பாட்டு.

இராகம்—பியாக் ஆதி—தாளம்.

பல்லவி.

கிரு:— இது நேரம் எது நீ செய்தாய் அர்ச்சுனா (இது)

அநுபல்லவி.

அதிக தாகமாக நானலைவிடு மெழுகாய்
மதியுருகி நீர்கொண்டுவரச் சொன்னேன் தாமதமாய் (இது)

சரணம்.

வனமுழுதிலுமோடிக் குளந்தேடி அலைந்தாயா
வழிதுறை தெரியாமல் மனநிலை குலைந்தாயா
சனிபோல் நானிருக்கிறேனெனவும்நீ நினைந்தாயா
தனியே தாகத்தால் வெம்பிச் சாகட்டு மென்றிருந்தாயா (இது)

வ-ம்:—பற்குனா! என் தாகம் தீருவதற்கு ஜலம்கொண்டு வருகிறேனென்றுபோய் எவ்வளவு நேரமாயிற்று. இவ்வளவு நேரம் என்ன செய்து கொண்டிருந்தாய்?

பாட்டு

(கண்ணாயிரம்படைத்த-என்ற மெட்டு)

அரு:— கண்ணா கனகமணி வண்ணா நான் சொல்வதைக்கேள்
கடுகியபுனல்கொடு வரமிகுவிரைவினில் ஓடினேன்—நீரில்
கரியகுழலரிவை உருவதுதெரியவும் சாடினேன்
எண்ணாமல் தண்ணீருள்ளே பெண்ணாளிருந் தாளென்று
எனதுமனமிளகி புனல்முழுதும் முழுகித் தேடினேன்—ஆதலால்
இருகாமுமயா உருகிமனதுமிக வாடினேன்

---



வ-ம்:—கோபாலா! தங்களுக்குத் தண்ணீர் கொண்டுவரப்போன அந்தக்குளத்தில் அல்லியைப்போலுருவம் தெரிந்தது. அதை உணராமல் அவள்தான் வந்துவிட்டதாகக்கருதி குளத்திலிறங்கித் தேடிப்பார்த்தேன்; ஒன்றுமில்லை. ஏமாந்துபோனேன். அதெல்லாமிருக்கட்டும்; சீக்கிரம் அந்த அல்லிமாதை நான் விவாகஞ் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யுங்கள்.

பாட்டு

இராகம்—எதுகுலகாம்போதி—தாளம்—ரூபகம் ஆதி.

கிரு:— கண்ணிரண்டு சொருகுதடா
கனத்தூக்கம் வருகுதடா (கண்)

காணுவாய் நித்திரை செய்தபின் கல்யாணம்
செய்துவைப்பேன்
காண்டீபா நீ நம்பு ஒருக்காலுமென்மொழிதப்பேன்
கானகமாகையால் மிருகங்கள் வருங்காத்திரு
நானுமெழுவேனொரு நாழிகைபொறுத்திரு (கண்)

வ-ம்:—விஜயா! எனக்கு கொஞ்சம் நித்திரைவருகிறது. என் தலைக்கு அணைபோல் உயரமாக உன் துடையைக் கொடுத்திரு. ஒரு நாழிகை நேரத்துக்குள் நித்திரை தெளிந்து கல்யாணஞ் செய்து வைக்கிறேன்.

அரு:—சுவாமி! நான் பல்விதமாக அவஸ்தைப்படுவது உமக்கு வேடிக்கையும் விளையாட்டுமாக விருக்கிறது. உம்மைவிட்டால் எனக்கு வேறுகெதியில்லை என்பதும் தங்களுக்கு நன்றாய்த்தெரியும். நான் துடையைக் கொடுக்கிறேன். சீக்கிரம் நித்திரைசெய்து விழியுங்கள்.

(கிருஷ்ணன் நித்திரைசெய்கிறான்)

பாட்டு

நல்லது மாதகிமானே—என்ற மெட்டு.

அரு:—பாரக்கருங்கல்லை யெடுத்து—துடைக்குப்
பதிலாயணைபோற் கொடுத்து—எண்ணுங்
காரியங்கைக்கொள்ளத்தொடுத்து—அல்லியைக்
காண்பதற்குச் செல்வேன் அடுத்து

---

[அர்ச்சுனன் பாராங்கல் ஒன்றை தலைக்கு அணைபோல் கோடுத்து எழுந்து அல்லிமாதை நோக்கிப்போகிறான். கிருஷ்ணன் எழுந்து]

கிரு:— இவன் கல்லைத்தூக்கிக்கொண்டுவரும்போது எங்கே நமது தலையில் போட்டுவிடுகிறானோ என்று நினைத்தேன். நல்ல வேளை தலைக்கு உயரமாகவைத்துப் போய்விட்டான். இனி நாம் சும்மாயிருக்கலாகாது. அவனோ அல்லியைத் தேடிப்போகிறான். நாம் நடுவழியில் ஓர் குறத்திவேடம் பூண்டு அவனைச் சந்தித்து குறிபார்த்து வேண்டியதைச் சொல்லி, குளிகைகொடுத்து அல்லிபிறந்த குளத்திலுறைக் கும்படி செய்து அதனால் அவனைப் பலகஷ்டங்களடையச் செய்து பின்னால் விவாகத்தை முடித்துவைக்கிறேன்.

(போகிறார்)

---

## 8-வது களம்.

(குறத்தி வருகிறாள்.)

குः— கொச்சிமலை பச்சைமலை எங்களது நாடு
குறவரெல்லாம் வாழுவது எங்களது நாடு
யானைமலை குதிரைமலை எங்களது நாடு
அந்த-ஐயனாரும் அறுமுகனும் வாழுவதென் நாடு
தேவாதி தேவரெல்லாந் தபசுசெய்யும் நாடு
உயர்-சித்தர்களும் பக்தர்களும் தேடிவரும் நாடு
அமராவதி இந்திரனும் வாழுமந்த நாடு
உண்மை-தவராமல்நான் குறியுரைப்பேன் தந்தால்நல்ல யீடு

---

வ-ம்:—குறியோ குறி! குறி கேட்கலையோ குறி!

[அர்ச்சுனன் எதிரே வருகிறான்.]

பார்ஸி—நோட்.

அரு:—இந்த நல்வேளை சுந்தரி போலே
எந்தனி கேரே வந்த நீ யாரு

கு:— செங்கைக் குறிபார்த்து சொல்லுங் குறத்தி
சிங்கத்தை யிங்கு அழைக்கும் திறத்தி



அரு— அப்படி யானால் இப்பொழு தேனும்
செப்புவா யானால் சொற்படி யாமோ

கு— செப்பிட எனக்கு சாமர்த்திய முண்டு
இப்பொழுதே எதைக் கேட்டாய் நிகண்டு

அரு— ஊரெனக் கேது பேரனக் கியாது
உண்மையை யிங்கு ஒளியாம லோது

பாட்டு

(பழுப்புக் கருப்பு—என்றமெட்டு)

அரு— என்கையை நீபார்த்து உண்மைக் குறிசொன்னால்
இங்கு வெகுமதி யாயுனக்கு
இச்சையா யாடை யாபரணங்க ளெல்லாம்
ஈந்திடுவேன் சந்தேக மெதற்கு
எழில்பெற்றிடு உருவத்தொடு
எதிர்நிற்கிற ஒரு சித்தினி (என்),

[குறிசொல்லுகிறாள்]

கு— அஸ்தினபுர மன்னன் புத்திரன்
ஐவரில் நீர் கெம்பீரன்
நல்ல—அழகு விஜய மாரன்
பல— லீலையில் விப காரன்
திரு—மாலுடனே இங்குவந்தீர் யாத்திரை உதாரன்

திரு மதுரை அல்லியின்மேல்காதல் மிகக்கொண்டு
தேடி—ஓடி வந்தீர் மருண்டு
பதம்—பாடி மோக முண்டு
க்ஷேத்ர-தெரிசனத்தில் பலமதனைக் கைமேற்பலன்கண்டு

கு— ஐயா! நீரிருப்பது அஸ்தினபுரம். நமது தந்தை பெயர் பாண்டு மன்னன். தாயார் பெயர் குந்திதேவி. உமது உடன் பிறந்தவர் ஐந்துபெயர்; உமதுபெயர் அருச்சுனன்; நீர் யாத்திரைக்கு வந்த இந்தச்சமயம் மதுரை ராணியாகிய அல்லியின்மேல் ஆசை கொண்டு உடன் வந்த கண்ணனை யும்மறந்து காதலுடன் இங்கு வந்திருக்கிறீர்; இதுதான் சங்கதி. சரியாயிருக்கிறதா?

பாட்டு
முன்தொடர்ச்சி

அரு— கண்டது கண்டாப்போல் முன்னுள்ள யாவையும்
கட்டுவச்சிச் சொன்ன யின்னமொன்று

நான்— காதல்கொண்ட அல்லி மாதெனைச்சேர இக்
காலம் வருவாளோ சொல்வா யின்று
கண்டத் தணியுங் காரி
வந்துற்றிடு சிங்காரி (கண்)

வ-ம்- குறத்தியே! உன் குறியைப்பற்றி சந்தோஷித்தேன். ஆனால் இன்னமொன்று. அல்லியென்று சொன்னாயே, அந்தமாதை நான் கலியாணஞ் செய்துகொள்ள முடியுமா? முடியாதா?

கு— நீர் அந்த அல்லியைக் கலியாணஞ் செய்து கொள்ளும்படி செய்கிறேன். நான் கேட்டதைத் தருவீரா?

அரு— தருவதில் தடையில்லை. சீக்கிரமாய்ச் சொல் தருகிறேன்.

கு— என்னிடம் மூன்றுமாத்திரைகள் இருக்கின்றன. அவைகளைத் தருகிறேன். நீர் கொண்டு போய் அல்லி குளத்தி லுள்ள படித்துறையில் உறைத்துக் கரைக்கவேண்டும். அந்தமாத்திரை நீரில் கரைந்ததும் அந்த அல்லி உமது மேல் காதல் கொண்டு உம்மையே விவாகஞ் செய்து கொள்வாள்.

கட்டி முத்தமிட்டிடக் கல்லாயிருக்குதே என்ற—மெட்டு.

அரு— அப்படியானால் மருந்தை ஆரணங்கே தா.
கு— ஆடை ஆபரண மெல்லாம் முன்பு கையில் தா.
அரு— அம்மருந்து பலிக்காமல் போனா லென்ன செய்வது.
கு— அவ்வுடமை எந்தனுக்கு ஏனெனக்கது.
அரு— நானறிய உன் குடிசை எங்கேதா னிருப்பது.
கு—நாலுமலைக்கு நடுவே தானிருப்பது.
அரு— நாலுமலைக்கு நடுவே நானறிவ தெவ்விதம்.
கு—ஏழுகுடிசைக் கெதிரே என் குடியிருப்பது
அரு— நல்ல தங்கு உன்னைவந்து நானழைப்ப தெவ்விதம்.
கு—சக்கம்மா ராமக்கா ளென்றாற் பாப்பீர் என்னிடம்.

---



வ-ம்:— ஐயா! இந்த மாத்திரையை ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ளும். மெத்தனமாக இருக்கக்கூடாது. அப்படி யிருந்தால் என் பெயர் கெட்டுப்போம். போய்வாரும்.

அரு:—அது எனக்குத் தெரியாதா? சென்று வருகிறேன்.

பாட்டு.
வாழ்ந்தவாழ்வும் போச்சே—என்ற மெட்டு.

அரு:—உன்—ஆசையாலே நானே—இங்கு
அலைகுறேனடி தேனே—உன்
அல்லியே மெல்லியே
அல்லியே மெல்லியே (ஆசை)

9-வது களம்.
மாத்திரைகளை உறைத்தல்.

அரு:—ஏ அல்லி! மோகனாங்கியான உன்னைப் பார்த்ததுமுதல் என் மனமானது மோகாந்தகாரத்தில் மூழ்கி வாதை யடைகிறது. இந்தவேளை என் முன்வந்து நாதா! என்றழைத்துச் செவ்விதழ் முத்தமொன்று தரக்கூடாதா? கண்மணி.

[அல்லியின் வேலைக்காரிகள் தண்ணீரெடுக்க வருகிறார்கள்.]

சேடி:—இதென்ன! யாரோ ஒரு மனிதன் இந்தப்படியின்மீது அமர்ந்துகொண்டு, நமது அல்லியின் பெயரைச் சொல்லி ஏதோ சில மாத்திரைகளை நீரில் உறைத்துக் கறைக்கிறான். என்ன துணிவு. இருக்கட்டும்; நாம் போய் நமது அரசியிடம் தெரிவிக்கலாம்.

சேடி:—ஐயா! நீர் யார்.

மணிப்புரஞ் சென்று—என்ற மெட்டு.

சேடி:—எதற்காக வந்தீர் ஏக்கத்தால் நொந்தீர்
எம்மிடம் உரைத்திடுவீர்
இனி மேல் நீ ரிப்படி செப்புவீரானால்
தண்டனைக் குள்ளாவீர்

அரு:—அழகு நிறைந்த அல்லியின் பெயரை
அறைவதினு லென்ன
நீங்கள்:-அவசரமாகவே சென்றிங் கவளை
அழைத்துமே வருவீ ரின்று

சேடி:—ஐயா! நீரென்ன செய்வீர். அம்மணியின் பெயரைச் சொல்லாமல் இருக்கமுடியாதோ? நீரிங்கேயே இரும். உம்மை வந்து பார்க்கிறேம். இன்னும் சிறிது நேரத்தில்,

அரு:—சீக்கிரமாக அல்லியைக் கூட்டிக்கொண்டு வாருங்கள்.

[சேடிகள் சென்று விட்டார்கள்.]

## 10-வது களம்.

### அல்லி தர்பார்.

பாட்டு.

கும்மி வர்ணமெட்டு.

சகி— தங்கக்குடமெடுத்து நாங்கள் தண்ணிக்குப்போயிருந்தோம்
அங்கு நடந்தசேதி சொல்ல அஞ்சிமிகப் பயந்தோம்
பெண்ணசை கொண்டதொரு மனப்பித்துப் பிடித்தபயல்
மண்ணாசை நீக்கியவன் மருந்து உறைக்குஞ்செயல்
அல்லி அல்லியென்பான் அடியடி வாடியென்பான்
இல்லையோ க்ருபையென்பான் இனிவிடு மோடியென்பான்
இப்படிச்சொல்லிக்கொண்டு அவனிருந்து மருந்துறைப்பான்
தப்பிதமென்று சொன்னலவன் தானுங்கேளாதிருப்பான்

வ-ம்:—மகாராணியாரே! நாங்கள் வழக்கம்போல் ஜலம் கொண்டுவர தாங்கள் பிறந்த குளத்திற்குப் போயிருந்தோம். அங்கே ஒருவன் படித்துறையி லுட்கார்ந்து ஏதோ கையில் சில மாத்திரைகளை வைத்துக்கொண்டு, தங்கள் பெயரைச் சொல்லி யுரைத்துக் கரைத்துக்கொண்டிருந்தான். நாங்கள் அவனை அதட்டிப் பார்த்தோம்; அவன் சித்த சுவாதீனமில்லாதவன் போல் தங்கள் பெயரையே சொல்லித் திரிகிறன்.



அல்:— அடிதோழியரே! நான் பிறந்த குளத்தின் கரையில் உட்கார்ந்துகொண்டு கொஞ்சமேனும் அஞ்சிடாமல் என் பேரைச் சொல்லி மருந்துறைக்கும் தைரியமுடையவனும் இருக்கிருனு? அவன் எப்படிப்பட்டவனுயிருந்தாலும் சரி, இந்தச்சமயமே கொன்று மறுவேலை பார்க்கவேண்டும். ஆகையால்,

பாட்டு

ஐமேலேகுதரத்து—என்ற மெட்டு

வாய்கூசாமலெந்தன் பேரைச்சொல்வோனுக்
கென்னமாய் தண்டஞ் செய்திடலாம்
மாதர்களே ஓதிடுவீர்
மாருக நாம் விட்டால் நேராய் நகைத்
திடாரோ ஊரரெல்லாம்
வந்தவன் அந்தர
இந்திரனுயினும் சந்திரனுயினும்
அவன் வாணுளை யொழிக்க இதுவேகாலமதிக்க
மதிமே வியதாம் விதமே மொழிவீர்
வஞ்சகம் நெஞ்சினில் கொண்ட
வண்டனைச் சும்மா விட்டிடலாமா (வா)

வ-ம்:— சகிகளே! அவனை இந்தக்ஷணமே இழுத்துக்கொண்டுபோய் வைகையாற்றில் சுடுமணலில் கட்டிப் புரட்டிவிடுங்கள்; போங்கள்.

## 11-வது களம்.

### ஆற்று மணல்.

பவ:— ஐயா! இங்கே வந்து இப்படி நில்லும். அல்லி வந்துசேருவாள்.

அரு:— அப்படியா! நீங்கள் எங்கே செல்லுகிறீர்கள்.

பவ:— என்னடி செங்கமலம்! நம்மால் சிறிது நேரங்கூட இந்த மணலில் நிற்க முடியவில்லை. இவன் எப்படியடி நிற்கிறன்.

### ஆற்றங்கரை.

பாட்டு

எந்தவூரோ நீ யிருப்பதேது—என்ற மெட்டு

அரு:— ஆற்றுமணலில் வீற்றிருக்க அல்லிவருவாளோ
அணைந்துலீலை செய்து சுகம் அன்பாய்த்தருவாளோ
குளிர்ந்தஇந்தஇடத்தில்வந்து கூடுவாளோ அல்லி
கொஞ்சிமுத்தமொன்று தருவாளோ கேலிசொல்லி
சில்லென்றுகுளிர்ச்சி மிகச்சேர்ந்தஇந்தவிடத்தில்
அவள்-சேர்ந்திருந்தால் தானேயின்பம் ஜெனிக்கு மெந்தனுளத்தில்

வ-ம்:—மாதர்களே! உங்கள் அரசியாகிய அந்தஅல்லிமாது இங்கே எப்பொழுது வருவதாகச் சொன்னாள்? போய் சீக்கிரம் அழைத்துக்கொண்டு வாருங்கள்.

சேடி:—ஐயா! நீர் இங்கேதானிரும். நாங்கள் சென்று அழைத்து வருகிறோம்.

சகி:— அடி! என்னடி நம்முடைய கால்கள் சூடுபொறுக்கமாட்டாமல் கொப்பளமுண்டாகிறது. இவனென்ன மகிழ்ச்சிகொண்டு நமது ராணியார் எப்பொழுது வருவார்களென்று ஆனந்தமாய் கேட்கின்றானே! வாடி, போய் இந்தச்சமாச்சாரத்தை ராணியிடம் சொல்வோம்.

(போகிறார்கள்)

## 12-வது களம்.

### அல்லியின் சபை.

சகி:— மகாராணியாரே! தங்கள் உத்தரவுப்படி அவனை ஆற்றுமணலில் நிறுத்தினோம். அவனுக்கொன்றும் அவஸ்தையாகத் தோற்றவில்லை. எங்களுடைய கால்களெல்லாம் கொப்பளித்துவிட்டது அம்மணி!



பாட்டு

போகாதே கூடியேனை—என்ற மெட்டு

அல்:— ஆஹா இதுவே ஆச்சர்யமடி ஆரணங்கேமாதே
ஆற்றுமணல் சூடுதாக்காதிருக்க அவன் மாயங்கற்று
ஆசையென்மேலுற்று அடைந்தான் போக்கற்று-இனி
அவனை எளிதினில் நாமும் விடுத்தால்
நகையாரோ சற்று ஆதலாலே மற்று
ஆலோசனை விட்டு நீர் அதிசீக்கிரமாய்
உயிர்போக்கிவர இசைவீரம் மட்டு
எந்தன் சொற்குட்பட்டு நீரிப்போதே நீரிப்போதே (ஆ)

வ-ம்:— அடி! அவனை இப்போது என்ன செய்யவேண்டுமென்றால் கொலைக்குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பதுபோல் நான் சொல்வதைக் கவனியுங்கள்.

பாட்டு

என்பேரைச்சொல்லி—என்ற மெட்டு

ஆற்றுமணல் சூடுதாக்காதிருக்க
அவன் மாயங் கற்றிருப்பான்
ஆனதினாலவனைத் தூக்கில் போட்டிட்டால்
ஆவியொழிந்திறப்பான் ஆவியொழிந்திறப்பான்
அண்டியே இன்று போய்க்கொன்றுவாரும்
அந்தப்படு பாவிதன்னை அந்தப்படு பாவிதன்னை
அந்தப்படு பாவிதன்னை

ம்:—அடி! இப்பொழுதே நான் சொன்னபடி அவனைத் தூக்கில் போட்டுக்கொன்று விடுங்கள் போங்கள்.

சகி:— அம்மணி! உத்தரவுபோல் செய்கிறோம். (போகிறார்கள்)

## 13-வது களம்.

### தூக்குமரம்.

தங்கை எங்கே—என்ற மெட்டு.

தாளம்—சாப்பு.

அரு:—எங்கே! எங்கே!! எங்கே!!!
இங்கே—வருவாளென்ற மங்கை யல்லி மாதை இங்கு(எங்கே)
பெரும்-மடுவிலிருந்து கூட்டி மணற்கரை சேர்த்தீர்
பருவ-மங்கை வருவாளா இங்குமே காத்தீர்
வீண்-காலதாமதம் வேண்டாம் கன்னிமார்களே (எங்கே)

அரு:—பெண்களே! எவ்வளவு நேரமாகிறது. இன்னும் உங்களரசி வரவில்லையே! போய் அழைத்துக்கொண்டு வாருங்கள் சீக்கிரம்.

சகி:— ஐயா! இதோ இந்த இடத்தில் நின்று அந்தக்கயிற்றை கழுத்தில் சுருக்கிட்டுக்கொண்டால் உடனே எங்கள் ராணியார் வந்து தங்களை அரண்மனைக்கு அழைத்துக் கொண்டுபோய் கல்யாணஞ் செய்து கொள்வார்கள். ஊம். சீக்கிரம் போட்டுக் கொள்ளும்.

பாட்டு

நல்வாக்கு நீ கோடடி எடுப்பு

அரு:—பார்த்துமறியேனடி பாவையரே உண்மையடி—நீங்கள்
பண்பாயதனை எனக்குக் காண்பித்தாலந்தப்படி
[செய்வேனடி.

வ-ம்:—அடி பெண்களே! நீங்கள் சொல்லியபடி அந்தக்கயிற்றைப் போட்டுக்கொள்ளத் தெரியவில்லை. ஆகையால் உங்களில் எவரேனும் முதலில் போட்டுக்காண்பித்தால் அப்பால் நான் அதன்படி செய்கிறேன்.

[செங்கமலம் என்ற தாதியானவள் போட்டுக்காண்பிக்கிறாள்.]
அதுசமயம் கால் இடறிவிட கழுத்தில் கயிறு சுருக்கிட்டு மடிகின்றாள்.



பாட்டு ஷை தொடர்ச்சி

நாக்கைப்பிதுக்குவதும் நல்லூஞ்சலாடுவதும்
நான்கண்டு கொண்டேனடி நீ யிறங்கிவாடி நாரியரே
[போதுமடி

செங்கமலம் இறந்தவுடன் பவளச்சேனை
மற்றவரைக் கூட்டிக்கொண்டு அல்லி
யிடம் செல்கிறாள்.

---

## 14—வது களம்

### அல்லியின் சபை

அல்.— பவளச்சேனை! உன் முகம் ஏன் வாட்டமாக இருக்கிறது. தெரிவி.

பவ.— அம்மனி! தாங்கள் சொல்லிய பிரகாரம் அந்தச் சண்டாளனைக் கொண்டுபோய் தூக்குமரப்படியில் ஏறும்படி சொன்னோம். அவன் நீங்கள் யாராவது ஏறி நின்று காண்பித்தால் அதன்படி செய்கிறேனென்று தெரிவித்தான். உடனே நமது செங்கமலத்தை ஏறி நின்று காண்பிக்கும்படி செய்தோம். திடீரென்று தூக்கு மரத்தின் கயிறு அறுந்து விழுந்து இறந்து விட்டாள் செங்கமலம்.

பாட்டு

அல்.— சேனைக்கதிபதி செங்கமலம்
செத்து மடிந்தாளோ
செத்துமடிந்தாளோ உயிர் இத்தினந்துறந்தாளோ (சே)

வேகமதாகவே பாதகனைக்கொன்று
காளி கோயில் முன்னே போடுபலி இன்று. (சே)

வ—ம் பவளச்சேனை! அந்தப் பாதகனை அழைத்துக்கொண்டு போய் காளியம்மன் முன்னிலையில் நிறுத்தி பலியிட்டு வாருங்கள்.

பவ.— அம்மனி! அப்படியே செய்து வருகிறோம்.

## 15-வது களம்

### காளி கோவில்

பவ.—ஐயா! இங்கே நில்லும். அல்லியம்மாள் இப்பொழுது வருவார்கள்.

[அர்ச்சுனன் நின்று கொண்டிருக்கிறான்]

கொலையாளிகள்

கொ.— ஏ மகாமாயி! ஜெகத்ரக்ஷிணி! ஏ பயங்காரி! துஷ்டர்கள் சங்காரி! இந்த நரபலியை ஏற்றுக் கொள்ளுவாய் ஜெகத்காரணி.

### காளி சொல்லுகிறாள்.

கொலையாளிகளே! உங்கள் அரசிக்கு எப்படி ஆண் வாடையாகாதோ, அதே மாதிரி எனக்கு இந்த ஆண் பலியை ஏற்றுக் கொள்ள முடியாது.

பவ:— வாஸ்தவந்தான். அம்மணியிடஞ் சென்று தெரிவிப்போம். வாருங்கள்.

## 16-வது களம்.

### அல்லியின் சபை.

பவ:— அம்மணி! தாங்கள் உத்திரவின்படியே கொண்டு காளியின் முன்னிலையில் நிறுத்தி பலியை ஏற்றுக்கொள்ளும்படி வருந்தினோம். அதற்குக் காளிதேவி! உங்கள் அரசிக்கு எப்படி ஆண் வாடையாகாதோ, அதேமாதிரி நானும் ஆண் பலியை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டது.

---

என்னுடன் பிறந்த பொன்னுருவி—என்ற மெட்டு

அல்:— மந்திரம் தந்திரம் முற்றிலுங் கற்றிவன்
முன்னே அங்கே வந்த நின்றவனே

[illegible]—தூக்கிலைக் கொண்டுபோய் [illegible]
முடுக்கென் இவ்விருவர் [illegible].

[illegible]—அவனை பழைத்துக்கொண்டு போய் பூதக் கிடங்கில் போட்டுக் கொல்லுங்கள்.

[illegible]— அப்படியே செய்கிறோம்.

---

## 17-வது களம்

### பூதக் கிடங்கு

[அர்ச்சுனனைப் பூதக்கிடங்கில் தள்ளிவிடுகிறார்கள்]

## 18-வது களம்.

### அல்லி தர்பார்.

(பரமாத்மா மெல்லிவேடம்பூண்டு வருகிறார்.)

பாட்டு

மைத்துனா மைத்துனரே—என்ற மெட்டு

மெ:— கணவனைக் காணுமலே கலங்கித்தவிக்கிறேனே
இனிமேன்னசெய்குவேனோ எந்நிலைமையாளுமைபோ
புருஷனைக் காணுமலே புலம்பித்தவிக்கிறேனே
வருஷமொன்று தாணுச்சு மணமுடித்து மயக்கலாச்சு (கண)

மெ:— தாயே! என் கணவன் என்னைவிட்டுப் பிரிந்து எட்டுமாசமாகுது. நானும் எங்கெங்கோ தேடிப்பார்க்கிறேன். ஒரு இடத்திலாவது அகப்படவில்லை. தாங்கள் பார்த்ததுண்டா அம்மா!

(சகிகள் மெல்லியை அல்லியிடம் அழைத்துவருகிறார்கள்.)

பாட்டு தர்க்கம்.

தந்திரவேள் — என்ற மெட்டு.

[illegible]:—பாரம்மா [illegible] நீ?
[illegible]:—என்பேர் மெல்லி என்பார்.
[illegible]:—[illegible] தாய்.
[illegible]:—[illegible]

அல்:—எதற்காக நீ வந்தாய்.
மெல்:—என் கணவனைத்தேடி.
அல்:—உன்—நாதன் எவர் பெயரென்ன.
மெல்:—அவர் கதையைச் சொல்லுகிறேன்.
அல்:—அவ்விதம் நீ சொல்லிடுவாய்.

---

மெல்:—அம்மா; மகாராணியாரே! என்பேர் மெல்லி. எனக்கு ஒரு தங்கையுண்டு. அவள் பேர் அல்லி. எனக்கு கல்யாணமாகி ஒரு வருடமாச்சுது. என் புருஷனுக்கு என் தங்கையாகிய அல்லி மீது அதிக ஆசையேற்பட்டு அவளையும் கல்யாணம் செய்து கொடுக்கச் சொல்லிக் கேட்டார். என் பெற்றோர்கள் சம்மதிக் காததினால் அவருக்கு என் தங்கையாகிய அல்லிமீதுண்டான ஆசையால் பைத்தியம்பிடித்து நின்றவிடத்திலெல்லாம் அல்லி! அல்லி!! யென்று சொல்லிக்கொண்டே திரிவார். தண்ணீர் துறைகளில் உட்கார்ந்துகொண்டு கல்லையும் மண்ணுங்கட்டி யையு மெடுத்து உறைத்துக்கொண்டேயிருப்பார். என்னை விட்டுப்பிரிந்து எட்டுநாளாச்சு. இன்னும் வரவேயில்லை. நானும் தேடாதயிடம் பாக்கியில்லை. அம்மணி!

அல்:— அம்மா மெல்லி! நீ சொல்லிய மனுஷன் என்னுடையபேரைச் சொல்லி நான்பிறந்த குளத்தில் குளிகையை உறைத்துக்கொண் டிருந்ததினால் எனக்குக் கோபமுண்டாகி அவரைப் பூதக்கிடங் கில் போட்டிருக்கிறேன். இப்போதே போய் அழைத்துக் கொண்டுபோ! வருந்தாதே! அடிசகி! நீயும் கூடப்போய் அவரைப் பூதங்களிடத்தில் நின்றும் இவளிடம் சேர்ப்பித்து விட்டுவா!

சகி:— அப்படியே ஆகட்டும் அம்மணி!

---

## பூதக் கிடங்கு.

பூதங்களெல்லாம் அர்ச்சுனனது கால்களைப் பிடித்து சந்தோஷப் படுத்துகின்றன.



பாட்டு
பருவகாலத்தை வீணாய்—என்ற மெட்டு

- மன்மதன் கணைகளென் மார்பைப் பிளக்குதடி அல்லி — உன்
மனமிரக்கங்கொண்டு வருவதெப்போதடி அல்லி
சித்தஜன்கோபங்கொண்டு சீறிவதைக்கிறாண்டி அல்லி—என்
தேகம்நொந்தேன் நீ வந்துசேருவதெப்போ அல்லி

சகி:— அம்மா! இதோ இருக்கிறார், அழைத்துக்கொண்டுபோ! நான் போகிறேன். (போகிறாள்)

மெல்:—அய்யா வாருங்கள். தங்களை அழைத்துக்கொண்டு வரச் சொன்னார்கள்.

அரு:—யார்! யார்!! அல்லிமாதுதானே! இதோ வருகிறேன். புறப்படு சீக்கிரம்!

## 19-வது களம்.

### கானகம்.

பகவான் நித்திரைசெய்துகொண்டிருக்கிறார்.
அருச்சுனன் வருகிறான்.

அரு— ஆஹா! நல்லவேளை, இன்னும் நித்திரைசெய்துகொண்டிருக்கிறார். நாம் போய்வந்த சமாச்சாரம் தெரியாதபடி இருக்கட்டும்.

அருச்சுனன் கல்லையெடுத்துவிட்டு முன்போல் குடையைத் தலைக்கு அணையாக வைத்துக்கொண்டு,

பாட்டு
திண்டுக்கல் ஜானகி என்ற மெட்டு

அரு—இன்னும் நித்திரைசெய்தால் எப்படி நான்பிழைப்பேன்
எழுந்தருள் செய்யுமை யா
என்மனச் சோகந்தீர எந்திமையானை
மணமே செய்துவையுமை யா
கோபாலா! எவ்வளவு நேரமாகத் தாங்கள் நித்திரைசெய்து கொண்டிருக்கிறீர்கள்? என்னுடைய குடைகளும் வலியெடுத்துக்கொண்டதே! சீக்கிரம் எழுந்திருங்கள்.

கிரு— பார்த்தா! நான் வெகுநேரம் நித்திரைசெய்திருப்போன்போல் தோன்றுகிறது! உன்னுடைய அதிஷ்டந்தான். என்றுமில்லாத தூக்கம் இன்றுவந்தது. இன்னும் என் கண்ணை விழித்து உன்னைப் பார்க்கமுடியவில்லை! அருச்சுனா! இதுவரையில் என் தலைக்குக்கீழ் உன்னுடைய துடையைவைத்துக்கொண்டிருந்தாயே உன் துடைவலிக்கிறதோ, பாபம் என்னால் உனக்குப் பெருங்கஷ்டம்!

அரு— சுவாமி! ஒருவிதத்திலா பலவிதத்திலும் வலிதான், போகட்டும், அல்லிமாதைக் கல்யாணம் செய்துவைபுங்கள்!

பாட்டு

சாகஉமக்கு விதிவந்ததோ என்றமெட்டு

இராகம்—புன்னாகவராளி-ரூபதாளம்.

அரு—
என்ஜீவன் எமலோகம் போகுது
இன்னமுமக்குக் கேலியாகுது
அன்பிருந்தால் மணஞ்செய்துவைபும்
அல்லாவிட்டாலென் சிரசைக் கொய்யும்
அல்லியென்னும் பெண்ணைச்சேர்வதெப்போ
ஆனந்தமாய் லீலை செய்வதெப்போ
கொல்லுதையோ பாவி மார னம்பு
கோபாலனே உனக்கேனோ வம்பு

கிரு— விஜயா! அதெல்லாமிருக்கட்டும். நான் நித்திரைசெய்யும்போது ஒரு சொர்ப்பனங்கண்டேன். அது உண்மையாயிருக்குமென்று நம்புவதற்கில்லை. ஆனாலும் அதைச்சொல்லுகிறேன்கேள். நீ என் தலைக்குக்கீழ் ஒரு பாராங்கல்லை வைத்துவிட்டு நீ காட்டின் வழியாக அல்லியைத்தேடிச்சென்றதாகவும், அங்கோர் குறத்தி உன்னைச்சந்தித்து உன்னிடமுள்ள ஆடையாபரணமெல்லாம் வாங்கிக்கொண்டு ஏதோ குளிகை கொடுத்ததாகவும் அதைக் கொண்டு அல்லி பிறந்த குளத்தின்கரையில் உறைக்கும்போது அல்லியினுடைய தோழிப்பெண்கள் உன்னைப் பிடித்துக் கொண்டுபோய்பல அவஸ்தைப்படுத்தி விடுத்ததாகக்கண்டேன். இவையாவும் உண்மையா! பொய்யா! சொல்?



மைத்துனா! தாங்கள் சொல்லியபடி அவ்வளவும் உண்மையாக நடந்ததுதான். அந்த அல்லிமாதுமேல் கொண்ட ஆசையானது குறத்தியிடத்தில் என் ஆடையாபரணங்களைக் கொடுத்துவிட்டேன். ஆனால் அவள் சொன்னபடி ஒன்றும் பலிக்கவில்லை. அது தான் என்மனதை வருத்துகின்றது. அதுபோகட்டும். சுவாமி கிருபைசெய்யவேண்டும்.

விருத்தம்.

கிரு— அணிபணி யுள்ளதெல்லாம் அவளிடம் சென்றுவாங்கித்
துணிவுடன் வந்தாயானால் தோகையா ளல்லிமாதை
மணமது செய்துவைப்பேன் மறுத்துரை யாடிடாமல்
குணமுட னின்றே யந்தக் குறத்தி யினிடஞ்செல்வாயே.

வ-ம்— அருச்சுனா! இப்படி யாராவது செய்வாருண்டோ! ஏன் உனக்கு அவ்வளவு அவசரம். நான் தான் தூங்கிவிழித்தவுடன் உனக்கு வேண்டியதைச் செய்வதாகச் சொன்னேனே! சரி,சீக்கிரம் அந்தக் குறத்தியிடஞ்சென்று என் ஆடையாபரணங்களை வாங்கிக்கொண்டுவா !

அரு— அப்படியே ஆகட்டும் சுவாமி!

(மலைத்தோடர்.)

(பாட்டு)

சிலம்போ என்றமெட்டு.மேலெடுப்பு

அரு— என்னையிந்தக் கெதியாய் விடுத்த
ராமக்கா ராமக்கா ராமக்கா
இங்கு சீக்கிரத்தில் வந்திடடி
ராமக்கா ராமக்கா ராமக்கா
உண்மையாய் சொல்லி ஏமாற்றினையே
ராமக்கா ராமக்கா ராமக்கா
உன்மருந்து பலிக்காமற் போச்சுதடி
ராமக்கா ராமக்கா ராமக்கா

(பாட்டு தர்க்கம்)

என்னஏவல் சொன்னாலும்.என்றமெட்டு.

குற— எவனடாயென் பேரைச்சொல்லி
இங்கே கூப்பிட்டாய் சொல்லு
அரு— எனையறியாயோ நீ முன்னே
ஏண்டி வந்திங்கே நில்லு
குற— எதுக்கென்னை நீ அழைத்தாய்
இங்கவ் விபரஞ் சொல்லு
அரு— என்னுடைமை யாவுங்கொண்டு
தந்துநீ அங்கே செல்லு
குற— ஏதடா உடமைகள் பாதகா ஓடடா
அரு— இனியுனை யெளிதினில் விடுவேனோ விடுவேனோ
கொடு கொடு கொடு கொடு இப்போது

குற— அடே அய்யே! நீ யார்? எங்கேயிருப்பது? நகைகளாவது ஆடைகளாவது நான் எப்போ உன்னிடம் வாங்கினேன். என்ன சுத்தப் பொய்க்காரனாயிருக்கிறாயே! போபோ! இங்கே நிற்காதே! என் புருஷன், அண்ணன்மார்கள் பார்த்தால் உன்னைக் கொன்றுபோடுவார்கள்.

அரு— ஓகோ! ஏது நீ மகா ஜாலக்காரியாக இருக்கிறாயே! என்னை நீ பார்க்கவில்லையென்று சாதிக்கிறாயே. என்னுடைய உடமைகளையெல்லாம் வாங்கிக்கொண்டு மருந்து கொடுக்கவில்லையா! என்னை ஏமாற்றலாமென்று பார்க்கிறாயா! அது முடியாத காரியம்!

விருத்தம்.

அரு— மருந்தது பலிக்காவிட்டால் வந்துகேள் உடமையெல்லாம்
திரும்பநான் தருவேனென்று செப்பினை மறந்திட்டாயே
கருந்தடங் கண்ணிநீயோர் கைக்காரி யறிந்துகொண்டேன்
பொருந்தநீ கொடுக்காவிட்டால் போகநான் விடவேமாட்டேன்.



பாட்டு.

இராகம்—மோகனம்—ஆதிதாளம்.

விடமாட்டேன் உன்னை விடமாட்டேன்
மிக இதமுரைத்தாலும் விடமாட்டேன்
அடமாகிய மொழியதுமேனோ என்
ஆடையாபரணமெல்லாம் நீ என்னிடமே தாராமல் (விட)

வ-ம்:— இந்தா! மரியாதையாக எல்லாம் கொண்டுவந்து கொடுத்தாலாச்சு; இல்லையேல் உன்னை லேசாக விட்டுப்போவேனென்று நினைக்காதே!

பாட்டு

ஓங்குபுகழ்தங்கும் லலிதாங்கிநானடா—என்ற மெட்டு

குற:— அண்ணன் தம்பியான குறவரே வாருங்கள்
அநியாயமிவன்செய்து நிற்பதைப் பாருங்கள்
புண்ணாக மேனிமெலிந்தேன் வேதை தீருங்கள்
இந்தப்-போக்கிரிப்பயலையோட்டி அப்பால் சேருங்கள்
பலபல சேதிகளை யிவன்ஓதி
பாவையென்மடி பிடித்திழுத்து நிற்பதால் (அண்)

[குறத்தியின் அண்ணன்மார்கள் வருகிறார்கள்]

குற:— அண்ணே! இவன் என்னிடத்தில் குளிகைவாங்கிக்கொண்டு அதற்குப்பதிலாக நகைகளைக் குடுத்துவிட்டுப்போனான். அதுக்கும் இதுக்கும் சரியாப்போச்சுது. இப்போவந்து நகையெல்லாம் கேட்கிறான். அதெப்படி கொடுக்கமுடியும் ஊம்:—

அரு:— அய்யா, இவள் என்னிடத்தில் ஏதோ மூன்றுகுளிகை கொடுத்து என்னுடைமைகளையெல்லாம் வாங்கிக்கொண்டாள். ஆனால் அந்தக்குளிகை அவள் சொன்னதுபோல் காரியம் முடியவில்லை. ஆகையால் அவள் சொன்ன வாக்குப்படி என்னுடைமைகளைக் கொடுத்துவிடவேண்டியது.

— இந்தாடா அய்யே! உன் ஆடையாபரணங்கள். இனிமேல் இங்கே நில்லாதே போ!

## கானகம்.

அரு:— ஸ்வாமி! தாங்கள் சொல்லியபடி இதோ ஆடையாபரண[illegible] வாங்கி வந்துவிட்டேன்.

### பாட்டு

உன்னைத்தூதனுப்பினேன்—என்ற மெட்டு

இராகம்-சாவேரி-அடதாளம்.

பல்லவி

இனிமேல் சகிக்கமாட்டேன் எப்படியும் அல்லியை
எனக்கு மணம் செய்து வைப்பீரையா (இனி)

அநுபல்லவி

அநியாய மாயனங்கன் அலரம்புபாய்ந்ததையா
அதனாலென துதேகம் அரைவாசி தேய்ந்ததையா (இனி)

சரணம்

கன்னபாழியைக் கழற்றி வாவெனவுஞ் சொன்னீர்
கடிநில் தாகந்திற்குநீர் தாவெனவுஞ் சொன்னீர்
அன்னைபோல் துடைகொடுத்து அருகிருக்கவுஞ்சொன்னீர்
ஆடையாபரணங்கள் வாங்கிவரவுஞ் சொன்னீர்
அதனை அறியாமல் அடிக்கடிகேலி
அறைவதழகில்லை முடித்திடுமிச்சோலி (இனி)

---

கிரு:— அர்ச்சுனா! வருந்தாதே! இப்போது உன்னை ஒரு பாம்பாட்டிக் காரனொரு பாம்புப்பிடாரனாக வேடம்பூண்டு உன்னை அல்லி யிடம் சேர்ப்பிக்கிறேன். அங்கே உனக்கு என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்துகொள். பின்பு அவளைக் கல்யாணஞ் செய்து வைக்கிறேன்.

அரு:— ஸ்வாமி! நல்ல யோசனை செய்தீர்கள். இவனென்னடா நம் மைத் தொந்தரவு செய்துகொண்டிருக்கிறான் இவனைப் [illegible] பாக்கிவிட்டால் பின்னொரு கஷ்டமுமில்லையென்று நினை[illegible] கள் போலும்! ஆனால் உமது தங்கை சுபத்திரை யிருக்கி[illegible] அவள் கோபப்படவேண்டும் பார்த்துக்கொள்ளுங்கள்! சரி வாருங்கள் போகலாம்.



## 20-வது களம்.

## மதுரை நகரில் கடைவீதி.

இராகம்—புன்னாகவராளி—தாளம்—ஆதி.

பாம்:—நாதர்முடி மேலிருக்கும் நாகப்பாம்பே
நச்சுப்பையை வைத்திருக்கும் நல்லபாம்பே
பாதலத்திற் குடிபுகும் பைக்கொள்பாம்பே
பாடிப்பாடி நின்றுவிளை யாடுபாம்பே (நா)

---

[பாம்புப்பிடாரன் இந்தப்பாம்பை ஆட்டிவைக்குஞ் சமயம், பாற்குடங் கொண்டுபோகுஞ் சிலமாதர்கள் தங்கள் குடங்களை இறக்கிவைத்துவிட்டு வேடிக்கைபார்த்தார்கள். அந்தச்சமயம் அந்தப்பாம்பு, அந்தக் குடத்திலுள்ள பாலை முற்றிலுங்குடித்துவிட்டு மீண்டும் ஆடியது.]

அல்:—சேடிகளே! ஏன் உங்கள் முகம் வாட்டமாயிருக்கின்றது. தெரிவியுங்கள்.

சேடி:—அம்மணி! நாங்கள் வரும் வழியில், ஒரு பாம்புப் பிடாரன் தன் பாம்பை ஆட்டிவைத்துக்கொண்டிருந்தான். நாங்கள் பாற்குடத்தை இறக்கி வைத்து, வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தோம். அந்தச்சமயம் திடீரென்று, அந்தப் பாம்பு, எங்கள் குடங்களிலுள்ள பாலை முற்றிலும் குடித்து விட்டது. இதைப்பற்றித்தான் கவலை.

அல்:—சேடிகளே! கவலைப்படவேண்டாம்! அமருங்கள். சேவகி! இங்கேவா! நீ சீக்கிரமாகச் சென்று, தெருவில் ஒருவன் பாம்பை ஆட்டி வைத்துக்கொண்டிருக்கின்றானாம்; அவனை அவன் பாம்புடன் என்முன்னே அழைத்துக்கொண்டுவா.

சேவகி-அப்படியே செய்கிறேன்.

---

## 21-வது களம்.
### கடைத்தெரு
(பாம்பாட்டி இடம்)

சேடி:—ஏ, பாம்பாட்டி! உன்னை எங்கள் மகாராணி அழைத்து வரும்படி கட்டளையிட்டார்; எங்களோடு வா போகலாம்.

பாம்:—என்னாத்துக்கு வாரேனுங்க, நீங்க போங்கோ, பாம்பைக் கூடையில் மூடிக்கினுவாரேனுங்க.

[எல்லோருமாக அல்லியிடம் போகிறார்கள்]

---

### அல்லிராணி தர்பார்.

சகி:— அம்மணி! பாம்புப் பிடாரன் வந்திருக்கின்றான். அழைத்துக்கொண்டு வரவா?

அல்:—இங்கே அழைத்துக்கொண்டு வாருங்கள்.

பாட்டு

நாதர்முடிமேலிருக்கும்—என்ற மெட்டு
அத்திமரத்திலே முட்டையிட்டு
ஆவரங்காட்டிலே குஞ்சு பொரிச்சு
குஞ்சுக்கு இரைதேடப் போனபாம்பே
குதித்துக்குதித்து நின்றாடாய் பாம்பே
நாணாட்ட பாம்பு நல்ல பாம்பு—என்
தம்பியாட்ட பாம்பு தண்ணிப் பாம்பு.

பாம்:—அம்மோய்! பாம்புப் பிடாரன் கும்பிடுகிறேன் அம்மோய்!

அல்:— அடே பாம்புப்பிடாரா! உன்னிடத்தில் என்னென்ன பாம்புகள் இருக்கின்றன.

பாம்:—அம்மோய்! சொல்றேன் அம்மோய்! கேட்டுக்கிங்கோ அம்மோய்!

பாட்டு.

இராகம்—புன்னாகவராளி—தாளம்—சாப்பு
பாம்பு விபரஞ் சொல்வேன்
பாராளும் ராணியே கேளாயம்மா



சோம்பலில்லாமலாடும் பரி
சுத்தகுணமதுஉற்றபாம்பு அம்மா
கல்லுபிளந்து செல்லும் நல்ல
கட்ட விரியனென்றிட்ட பாம்பு அம்மா
சொல்லுங் குணமுடைய நல்ல
கொம்பேறி மூக்கனென்றிட்டபாம்பு அம்மா
பச்சை நிறப்பாம்பு அதைப்
பார்த்தால் பயங்கொள்ளும் வண்ணப்பாம்பு அம்மா
மாணிக்க நாகமது என்
வசத்திலிருக்கிப்போதே பார்க்கலாம்

---

அல்— அடே! மாணிக்கநாகமிருக்கிறதல்லவா? அதையெடுத்து விளையாடச்செய் பார்க்கலாம்.

[பாம்புப்பிடாரன் பாம்பை ஆட்டுவிக்கிறான். அல்லிராணி அதைப்பார்த்து சகிகளிடம்]

பாட்டு

இராகம்-பூரிகல்யாணி-தாளம்.ரூபம்.

பல்லவி

அல்— ஆடும்வினோதத்தைப்பாரடி பார்க்க
ஆசைப்படாதவ ராரடி (ஆடு)

அநுபல்லவி

தோடுங்கடகமு மாகச் சிவபிரான்
சூடும்பாம்புகளும் ஈடாகுமோடி தான் (ஆடு)

சரணம்.

இப்பிடாரன் குழல் கானமும் இசை
வாகக்கேட்கவரும் ஞானமும்
தப்பிப்போகாமற் ஜதிக்கிணங்கி நின்று
தத்தித்தை தித்தித்தை ததிங்கிணத்தோமென்று (ஆடு)

---

அடி சகிகளே!

பாட்டு

மாலை விழுந்தபோதே—என்ற மெட்டு.

மாணிக்கநாகமிது என்
மனதிற்கு கந்தமிது கிட்டி
வந்துநிற்கிற விந்தையற்பல கண்டதைச்சொல
எந்தவிதமுடியும் இய
லாதுநானெப்படியும் இவன்
இங்குவேண்டுஞ் செல்வங்களீந்திதை
இன்றுவாங்க விரும்புறேன் புவி
தாங்குகின்ற அரவோ இங்கு
தானெப்படி வரவோ சிவ
சங்கரன்பிரி யங்கள்கொண்டர
வங்கள்கங்கணமொன்றுகொண்டதும்
இந்தவித விந்தையை யறிந்ததே

வ-ம்:— அடி தோழிகளே! இந்தப்பாம்பு ஆடினதைப் பார்த்ததி லிருந்து என் மனமானது அந்தப் பாம்பினிடத்தில் அதிக விருப்பத்தை யுண்டாக்குகிறது. ஆகையால் பாம் புப்பிடாரனுக்கு வேண்டிய பொருளைக் கொடுத்துவிட்டு இதை நாம் வைத்து வளர்ப்போம் என்ன சொல்லுகிறாய்?

சகி:— அம்மணி! தங்கள் மனம்போல் வைத்துக்கொள்ளலாம். பாம்புப்பிடாரனிடம் கேட்போம்!

அல்:— அடே பாம்புப்பிடாரா! இந்தப்பாம்பை எனக்குக் கொடுத்துவிடு. உனக்கு வேண்டிய பொருள்கள் கொடுக் கிறேன். வாங்கிக்கொண்டு போ. சம்மதந்தானா?

பாம்:— அம்மோய்! இது என்னுடைய பாம்பல்ல அம்மோய்! என் தங்கச்சி வளக்கிற பாம்பு அம்மோய்! அவ இதைக் காணாதுபோனா தாங்கமாட்டா அம்மோய்! இதை விலைக் குக் கொடுக்கமாட்டா அம்மோய்! கொடுங்க அம்மோய்! வவுரு பிளைக்குதுங்க.



[illegible]— அடே! இதை விலைக்குக்கொடுக்க இஷ்டமில்லாவிட்டால் இன்று இரவுமட்டுமாவது இங்கே இருக்கட்டும். வேண்டிய ஆடைஆபரணங்கள் தருகிறேன். அதைக் கொண்டுபோய் உன் தங்கையிடம் கொடுத்தால் சந்தோஷப்படுவாள். நாளை காலையில்வந்து வாங்கிக்கொண்டுபோ, என்ன சொல்லுகிறாய்?

பாட்டு

பூவருந்திருவே—என்ற மெட்டு

பாம்:— இளைத்துப்போகுமம்மா பாம்பு
இளைத்துப்போகுமம்மா
இரவிலிருந்தா லொருவர்கையிலும்
இரையெடுக்காது இரையெடுக்காது (இளை)

வ-ம்:— அம்மோய்! இந்தப்பாம்பு என் தங்கச்சியை காணமற் போனா இளைச்சுப்போகுங்கோ! அம்மோய்! இதுக்கு என் தங்கச்சி கொடுக்கிறாப்போல நீங்க கொடுக்கமாட்டீங்க அம்மோய்!

பாட்டு

இராகம்—தன்யாசி—தாளம்—ஆதி

அநுபல்லவி எடுப்பு.

அல்:— களைத்துப்போகாமலெந்த விதத்திலும் நல்லுணவு
களைக்கொடுத்திருப்பேனவ் விதத்திற்குமாறாகவும்
இளைத்துப்போனால் குறைந்த இடைக்கு
ரத்தினங்களைநிறுத்துக் கொடுப்பேனுனக்கு
சர்க்கரைப்பாகு கலந்திருக்கும் ருசியான
பலவர்க்கமாமிட்டாய் வகைகளும்பெருஞ்
ஜாடி நிறைவான நெய்யினாலே பாகமாய்க்கிளறிச்
சமைத்த அல்வாவகைகளும்
முக்கனி பசுவின்பாலும் முன்னமே இந்தப்பாம்பிற்கு
அக்கரையாயுண்ணவைப்பே னப்புறமையமெதற்கு (இளை)

வ-ம்:— அடே! இந்தப்பாம்பு இளைத்துப்போகுமென்று பயப் படாதே! இதற்கு என்னென்ன ஆகாரங் கொடுக்கவேண் டுமோ அவைகளையெல்லாங் கொடுத்துப் பத்திரமாகப் பாதுகாப்பேன். ஒருவேளை இன்றிரவு உன் தங்கையைப்

பிரிந்திருக்கும் துக்கத்தால் இளைத்துப்போனால் அதற்கு இரட்டிப்பாக ரத்தினங்களை நிறுத்துக்கொடுக்கிறேன். அடி இந்தப்பாம்பை நிறுத்துக்கொண்டு எடை எவ்வளவு இருக்கிறது பார்த்துவா; பாம்புப்பிடாரா நீயும் கூடப்போ.

பா:— அம்மோய்! இந்தப்பாம்பு எண்பீத்தொம்பது பலம் இருக்குது அம்மோய்! நான் போய்வாறுங்க அம்மோய்!

(போகிறான்)

அல்:—சகிகாள்! எனக்கு நித்திரைவருகிறது. சயனித்துக் கொள்ளுகிறேன். நீங்களும்போய் சயனித்துக்கொள்ளுங் கள்.

[சகிகள்போனபின் பாம்புஉருவாக இருந்த அர்ச் சுனன் தன் சுயரூபமாகிறான்.]

அரு:—ஆஹா! இவளோ மஞ்சமீது நித்திரை செய்துகொண்டிருக் கிறாள். ஒருவேளை நான் சமீபமாகப் போகும்போது விழித்துக்கொள்வாளாகில் மோசம்வந்துவிடும். ஆகையால் இவள் நித்திரை நீங்காதிருக்க கோபாலனை பிரார்த்தித் துக்கொள்வோம்.

பாட்டு

(முத்திநெறியறியாத — என்ற மெட்டு)

கண்ணனெனுங் கோபாலா
சண்ணிருக்கு மணிலோலா
புண்ணியனே நானிந்தப்
பூவைமாரி லைக்கூட

எண்ணியதால் மூதேவி
என்னும்பெய ரொன்றுமொரு
பெண்ணையிவள் முகமேவிப்
பெருநித்திரை புரிவிப்பாய்

என்னையொரு பாம்பாக்கி
இவள்மடியில் விளையாட
இன்னருள் நீ செய்ததனை
எப்போதும் நான்மறவேன்



சின்னமதன் போராட்டந்
தீரவிரை வாயிந்தக்
கன்னிமயக் கங்கொள்ள
கருணைபுரி மாதவனே

அ-ம்:—எனதாசைக்குசந்த அல்லிமாதே! ஆ! இவள் விழித் திருந்து என்னோடு கொஞ்சி விளையாடினால் எப்படியிருக் கும்? பெண்ணே!

(பாட்டு)
தும்பினமோரி—என்றமெட்டு.

மலரணையழகாய் விரித்திருக்கிறது
மருவவராததேனோ மடமானே
சிலைமதன் கணைகள் பலபல விடநான்
உலைமெழு கானேனே
கொலைபுரிவதுவும் நலமல மயிலே
குலவியணையவா நீதானே

---

[அர்ச்சுனன் அல்லியுடன் ஆனந்தமாக இருக்கிறான். விடியும்சமயம் சகிகள் அல்லிராணியை அழைக்கிறார்கள்.]

சகி:— மகாராணியாரே! எழுந்திருங்கள்! பொழுதுவிடிந்து வெகு நேரமாகிவிட்டது. இதுநாள்வரை தாங்களிப்படி நித்திரை செய்ததில்லையே? அம்மணி! இது என்ன தங்களுடைய முகம் ஏதோ மாறுதலான தோற்றத்தை யடைந்திருக்கி றது; மேலும் ஆடையாபரணங்களெல்லாம் தாறுமாறாக இருக்கிறது. காரணமென்ன? தங்கள் உடம்பிற்கு இரவு ஏதேனும் அசௌக்கியம் ஏற்பட்டதா? தாயே!

அல்:— அடி தோழிகளே!

விருத்தம்.

மங்கையாளொருத்தி யாசையினோடு
வளர்த்திட்ட பாம்பிதாகையினால்
சங்கையில்லாமல் இரவிலென்னிடத்தில்
சரசங்கள் செய்திருந்திடலாம்

இங்கிதல்லாமல் வேறொருவிதமு
மெந்தனுக் குத்தெரியாது
உங்களுக்கிருக்கு மையங்கள்நீங்கி
உளமகிழ்ந் தருகில்வீற்றிருப்பீர்.

வ-ம்:—சகிகளே! பாம்புப்பிடாரன் தன் தங்கை வளர்த்த பாம்பு என்று சொன்னானல்லவா? அதனால் இந்தப்பாம்பு இராத்திரியெல்லாம் என்னோடு விளையாடிக்கொண்டிருந்தது. அதுசமயம் என்னையும் அறியாதபடி நித்திரையில் ஆழ்ந்துவிட்டேன். ஆகையால் என்னுடைய ஆடையாபரணங்களும் சீர்குலைந்தது தெரியாமலிருந்தது. வேறொன்றும் தேகத்திற்கு சுகக்குறைவில்லை.

[இதுசமயம் பாம்புப்பிடாரன் வாசலில் கத்துகிறான்.]

பாம்:—அம்மோ அம்மோய்! பாம்புப்பிடாரன் வந்திருக்கிறேன். அம்மோய்! பாம்பேகொடுங்க அம்மோய்.

அல்:—அடி சகிகளே! பாம்புப்பிடாரன் வந்துவிட்டான். அவனிடம் இந்தப் பாம்பை எடுத்துக் கொடுத்துவிடுங்கள்.

[சகிகள் பாம்பைப் பாம்புப்பிடாரனிடம் கொடுக்க அதைப் பாம்புப்பிடாரன் வாங்கிப்பார்த்து]

பாம்:—அம்மோய்! இதென்ன அம்மோய்!! நாகப்போன் இளிச்சுப்போனு, கண்ணு உள்ளேபோனு, சதை ரப்பிப்போனு, மூக்கு தள்ளிப்போனு, கனங்குறைஞ்சுபோனு அம்மோய்! நிறுத்துக்கொடுங்க அம்மோய்!

அல்:—அடி சகிகளே! அந்தப்பாம்பை நிறுத்து குறைந்த இடைக்கு இரட்டிப்பாக ரத்தினங்களைக் கொடுத்து அனுப்பிவிடுங்கள்.

(பிடாரன் பாம்பைக் கொண்டுபோகிறான்)

---



## 22-வது களம்.

வசனம்

கிரு:— அருச்சுனா! உன் எண்ணம் முடிந்துவிட்டதல்லவா. இனிமேலாவது நம் நகருக்குச்செல்வோம்.

அரு:—பரமாத்மாவே! உமது மகிமையே மகிமை. உமது மகிமையை நான் எவ்வாறு புகலுவேன். இன்னுமொன்று பாக்கியிருக்கிறதே, அதைமுடிக்க இன்னும் மனம்வரவில்லையா?

கிரு:— என்ன பாக்கியிருக்கிறது? அதை எனக்குத்தெரிவி.

அரு:—அதுதான்? கலியாணம்; மறந்துவிட்டீர்போலும்.

கிரு:— இன்னுமொரு தந்திரஞ் செய்யவேண்டும். அதாவது, இன்னும் பல மிருகங்களை ஏவி இந்தக்குடிகளிட்ட பயிரை அழிக்கும்படி செய்கிறேன். மீண்டும் அல்லி வேட்டைக்கு வருவாள். தாகவிடையினால் தத்தளித்து வரும்வழியில் நாமிருவரும் நான் ஒரு கிழட்டு பிராமணத்தியாகவும், நீ ஒரு கிழட்டுப்பிராமணனாகவும் வேஷமிட்டு, தண்ணீர்ப்பந்தல் வைத்து அதிலமர்ந்திருக்கவேண்டும். அவள் தண்ணீர்சாப்பிட்ட அன்பினால் நம்மையும் அவளோடு அழைப்பாள். நாமும் உடனே போய் சமயம்பார்த்து தாலியைக் கட்டிவிடவேண்டும். இதுதான் தந்திரம். உனதிஷ்டமென்ன?

அரு:—உமது இஷ்டப்படிதான்! வாரும் போகலாம்.

---

## 23-வது களம்.

கானகம்.

[அல்லி குடிகளின் க்ஷேமத்தைக்கருதி மிருகங்களை வதைத்து களைப்படைகிறாள்.]

அல்:—சகிகளே! எனக்குதாகம் அதிகரிக்கிறது; சீக்கிரம் கொஞ்சம் ஜலம்கொண்டுவாருங்கள். அதோ காணப்படுகிறதே! தண்ணீர்பந்தலா? வாருங்கள் போய்ப்பார்ப்போம்.

### தண்ணீர்பந்தல்.

வசனம்.

கிரு:— அர்ச்சுனா! அதோ அல்லிராணி சகிகளுடன் இந்தஇடத்தை நாடி வருகிறாள். ஆகையால் இந்தக் காவியாடைகளையும் வெளுத்த தாடிமீசையும் அணிந்து கிழவனாக நடித்துக் கொள். நான் உன்னுடைய பத்தினியாக பெண்வேடம் தரித்துக்கொள்ளுகிறேன். நீ ஒன்றும் பேசக்கூடாது. நான் மற்ற காரியங்களைப் பார்த்துக்கொள்ளுகிறேன்.

(வேடம் மாறிக்கொள்ளுகிறார்கள்.)

கிரு:— அம்மணி! வாருங்கள், உங்களுடைய முகங்களைப்பார்த்தால், தாகத்தால் வருந்துகிறவர்கள்போல் காணப்படுகிறது. இதோ குளிர்ந்தஜலம் இருக்கிறது. சாப்பிடுங்கள் அம்மணி.

[அல்லிராணி சேடிகள் தாகசாந்தி செய்துகொள்ளுகிறார்கள்]

அல்:— அம்மா! இந்தக் கானகத்தில்வந்து ஜீவனுக்கு முக்கிய ஆதாரமாகிய தண்ணீர்ப்பந்தல் வைத்துப் பாதுகாக்கும் உங்கள் தருமம் சிறந்ததாகும். ஆனால் தங்களைப்பார்த்தால் எங்களைப்போல் இளம்பெண்ணாக தோற்றுகிறது. அதோ சற்று தூரத்தில் நிற்கும் அவரைப்பார்த்தால் வயது முதிர்ந்தவராகக் காணப்படுகிறது. அவர்யார்? தாங்கள் யார்? நீங்களிருப்பது எந்தத்தேசம்? அதுவிபரங்களை தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிரு:— அம்மணி! என்பெயர் கிருஷ்ணம்மா. அவர் என்னுடைய பர்த்தா. அவர்பெயர் காண்டீப அய்யர். எங்கள் சுயதேசம் இந்திரப்ரஸ்தம். புத்திரபாக்கியத்தின்பொருட்டு காசி முதல் ராமேஸ்வரம்வரை யாத்திரைசெய்து பல தர்மங்களும் செய்து வருகிறோம். அதில் இந்தத்தருமம் சிறந்ததெனக்கருதி நாங்கள் தங்கும் இடங்களிலெல்லாம் செய்து கொண்டு வருகிறோம்.



அல்:— அம்மணி! மெத்த சந்தோஷம். இவ்வளவு பரோபகார தர்மத்தைக்கைக்கொண்ட தங்களை எனது அரண்மனைக்கு அழைத்துக்கொண்டுபோய் சிலநாள் வைத்திருந்து அனுப்பலாமென்று நினைக்கிறேன். ஆகையால் தாங்கள் புருஷனுடன் வந்திருந்து பிறகு உங்கள் சுயதேசம் போகலாம் வாருங்கள். அம்மணி!

கிரு:— அம்மணி! தாங்களோ இந்த பாண்டியநாட்டை யாளும் அரசி! ஆகையால் தங்கள் உத்தரவுபோல் நடக்கச் சித்தமாயிருக்கிறோம் அம்மணி!

அல்:— மெத்த சந்தோஷம். வாருங்கள்போகலாம்.

(எல்லோரும் போகிறார்கள்)

---

### 24-வது களம்.

### அல்லியின் அரண்மனை.

கிரு:— அம்மணி! இன்றையத்தினம் எங்களுக்கு ஒரு நோன்பு நோற்கவேண்டும். ஆதலால் தேங்காய், பழம், புஷ்பம், கற்பூரம், குங்குமம், இன்னும் இதற்கு வேண்டிய சாமான்கள் முற்றும் கிடைக்கும்படி செய்யத் தாழ்மையாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

அல்:— நீங்கள் பூஜைமண்டபத்திற்குச் செல்லுங்கள். சொல்லிய சாமான்கள் அங்குவந்துசேரும்.

கிரு:— அப்படியே செல்லுகிறோம்.

அல்:— சேடியே! எனக்கு ரொம்ப அலுப்பாயிருக்கிறது. சற்று இந்த மஞ்சத்தின்மீது சயனித்துக்கொள்ளுகிறேன். நீங்கள்சென்றுவாருங்கள்.

### அல்லிராணி அந்தப்புரம்.

அல்லிராணி மஞ்சத்தில் சயனித்திருக்கிறாள்.

கிரு:— அர்ச்சுனா! உன் தங்கையாகிய இந்திராணிடமிருந்து இந்தத் தாலியை வரவழைத்தேன். சீக்கிரம் இந்தச் சுபவேளையில் இதை இவள் கழுத்தில் கட்டிவிடு. ஊம்!

[அருச்சுனன் அல்லிகழுத்தில் தாலியைக் கட்டுகிறான்]

வசனம்.

அரு:—கோபாலகிருஷ்ண பரமாத்மா! என்னுடைய எண்ணம் பூர்த்தியாகிவிட்டது. இன்னும் அவள் கட்டியிருக்கும் விருதுகளையெல்லாம் அறுத்தெறிந்துவிட்டுப் போகலாம் வாருங்கள். (போகிறார்கள்.)

சகி:— அம்மணி! அம்மணி!! இதென்ன தங்களுடைய கழுத்தில் அதிசயமாக இருக்கிறதே?

அல்:—(எழுந்து) என்னடி அதிசயங்கண்டுவிட்டீர்கள்?

சகி:— தங்களுடைய கழுத்தில் இதுவரையில்லாததும் நாங்களிது வரை இவ்விதம் பார்த்திராத மாங்கல்யமாகத் தோற்றப் படுகிறதே! தாங்கள் கவனிக்கவில்லைபோலிருக்கிறதே! அம்மணி!

(அல்லி கழுத்திலிருக்கும் தாலியை எடுத்துப்பார்த்து)

அல்:—ஆஹா! என்ன ஆச்சரியம்; இதை யார் என்னுடைய கழுத்தில் கட்டியது? ஏதோ சூதாகவன்றோ நடந்திருக்கிறது! வசம்:- ஓ, இந்தக்காரியம் செய்தவர்கள் யார்? அவன்யார்?

பாட்டு

ஸ்ரீ ராமச்சந்திரனே—என்ற மெட்டு

அல்:—எட்டி யிருட்டுவேளை கிட்டித்திருட்டுத்தாலி
கட்டிவிடுத்துநடந் தானடி
பட்டிமுரட்டுக்காளை கெட்டநடத்தைக்காகக்
கட்டை கழுத்திலிடுவார் போல
சட்டிப்போனதெந்த மட்டிப்பயல்
அவன்-காமவிகாரங்கொண்ட சுட்டிப்பயல்
நான்-கண்ட ஈலிப்போதிரண்டு துண்டாக்குவேனெனைத்தன்
பெண்டாக்கவோ நினைத்திட்டான் பாவி (எட்டி)

வசம்:— அடி! நீங்களெல்லாம் இங்கே காவல்தான் புரிந்துகொண் டிருந்தீர்களோ? பவளச்சேனை! எந்தக் கொடியவஞ்-



சனோ கபடமாக உட்பிரவேசித்து இக்காரியத்தைச் செய்திருக்கிறான். சீக்கிரம் இந்த அரண்மனை முழுவதும் எவரேனுமிருக்கிறார்களா என்று பார்த்துவாருங்கள் போங்கள்.

பவ— அம்மணி! அரண்மனை எங்கும் தேடிப்பார்த்துவிட்டோம். ஒருவரையுங்காணோம். நேற்றிரவு இவ்விடத்திற்கு அழைத்துவந்த அந்தப்பெண்ணையும் கிழவனையும் காணவில்லையே! அவர்கள் போனவிதமுந் தெரியவில்லை. ஒருவேளை அவர்கள் வஞ்சகமாக நம்மை ஏமாற்றி எவருடைய போதனைமேலாவது இக்காரியத்தைச் செய்துவிட்டுப் போயிருக்கலாமென நினைக்கிறேன் அம்மணி!

அல்— பவளச்சேனை! சீக்கிரம் நான் சொல்லுகிறபடி நிருபம் எழுதி பலதேசத்தரசர்களுக்கும் அனுப்பவேண்டும்; எழுது.

கடிதம்

அல்— மனுமுறைப் படிதங்கள் மாநிலங் காவல்புரி
மன்னுதி மன்னர் கட்கு
மதுரைமா நகரையொரு அரசியா யரசுபுரி
மங்கையா ளல்லி யென்னும்
தனுர்வேத விற்பனி ஜெயவீர சர்ஜனி
தனைநேரி லாவிற் பனி
சத்ராதி யர்க்குவரு மித்திராதி யர்க்குமுயர்
தனமருள வந்தவசனி
சினமேவு கட்கடை சிவக்தெழுதி வரவிட்ட
சித்திர விநோத நிருபம்
திருடனெவ னேஇரவி லென்கழுத் திற்றாலி
சேர்த்தகன் றுனைதால்
மனமொன்று சந்தேகம் வந்திட்ட துங்கள்மேல்
மாசத்தி யஞ் செய்திட
வரவேணு மிதுசமயம் இல்லையே லெதிரிட்டு
வந்துங்க ளைக்கொல் வனே.

வசனம்.

சீக்கிரம்! இந்த மாதிரி பல நிருபங்களை எழுதி சகல தே
சத் தரசர்களுக்கும் அனுப்பி விடுங்கள் [நிருபம் அனுப்ப
ஐம்பத்தாறு தேசத்தரசர்களும் வருகிறார்கள்]

## அல்லிராணி தர்பார்

கிரு:— அம்மா! இங்கே என்ன செய்யவேண்டும்?

பவ:— எங்கள் அரசி கழுத்திற் கிடக்கும் மாங்கல்யம் கட்டியது நானல்லவென்றும், கட்டியவர்களும் தெரியாதென்றும் சொல்லி அதோ காய்ந்துகொண்டிருக்கும் நெய்க் கொப்பரையில் கையை நனைக்கவேண்டும்.

(கிருஷ்ணபகவான் சத்தியம் செய்தபின்)

பீமன்-பரமாத்மா! இதோ நானும் சத்தியஞ்செய்து விடுகிறேன். நெய்க் கொப்பரை குளிர்ந்திருக்கும்படி அனுக்கிரகஞ் செய்யவேண்டும்.

[பகவான் கண்சாடை காண்பிக்க பீமன் நெய்யையெல்லாம் குடித்துவிட்டு கொப்பரையை உருட்டிப்போகிறான்.]

பவ:— அம்மணி! இந்திரப் பிரஸ்தத்தையாளும் தர்ம பூபதியின் சகோதரர் பீமராஜர் நெய்யையெல்லாம் குடித்துவிட்டுப் பாத்திரத்தையும் கீழே எறிந்துவிட்டுப் போகிறார்.

அல்:—(கோபத்தோடு) ஆஹா! அப்படியா சமாச்சாரம்? பவளச் சேனை! தாமதியாது நமது சைனியங்களைச் சித்தப்படுத்தி இப்பொழுதே புறப்பட்டுபோய் அவர்கள் வம்சமென்பதே யில்லாமற் செய்யவேண்டும். புறப்படுங்கள் சீக்கிரம்.

(எல்லோரும் போகிறார்கள்)

## தர்மராஜா தர்பார்

பாட்டு

இராகம்-மத்தியாவதி-தாளம்-ஆதி

பல்லவி

சகா— ஆலோசனை செய்வதேன் அண்ணா தாங்களிப்போது



அநுபல்லவி.

மேலோர் புகழும்தர்ம ராஜராம் தங்கள் மீது
வாளேந்தி நிற்கும்அல்லி மேலே சண்டைக்குச்செல்ல (ஆ)

சரணம்

பெண்ணென்று தாம்கவலை கொள்ளவேண்டாமிவ்வேளை
தன்னை யெதிர்த்தபசு தன்னைக்கொல்வது போல (ஆ)

வ-ம்-அண்ணா! எது காரியத்திற்கும் ஆலோசிக்கிறீர்கள். கேவ
லம் ஒரு ஸ்திரியானவள் பட்டாபிஷேக பாக்கியத்தைப்
பெற்று ராஜரீகம் செய்யும் நேர்மையை யடைந்தாலும்,
ஆயுதாதிகளை அரையிற்கட்டி அமர்க்களம் நின்று போர்
புரிய ஆண் தன்மை யுண்டாகுமோ ஒருக்காலுமுண்டாகாது.
அப்படியானால் தற்காலம் படைகளோடு நம் நகரைச்சுற்றி
வளைந்து அரைகூவி நிற்கிறாளென்றால் அது அறியாமை.
ஸ்திரீகள் எவ்வளவு அரிய பெரிய செயல்களைச்செய்து
முடிக்க வல்லவர்களாயிருந்தாலும், "எண்ணித்துணிக கரு
மம் துணிந்தபின் எண்ணுவமென்பதிழுக்கு" என்ற
மேலோர் மொழியைச் சிந்திக்காமல் இந்த விதமாய்ச் சிற்
சிலகாரியங்களில் பிரவேசித்து நஷ்டத்தையும் அவமானத்
தையுமடைய நேரிடுவதனாலன்றோ பெரியோர்கள் பெண்
களுக்குப்பேதையரென்று பொதுவாக ஒரு நாமதேயத்தைச்
சூட்டிவைத்திருக்கிறார்கள். இவ்விஷயங்களை நன்கு தெரிந்
திருந்தும் தாங்களிப்போது மந்திராலோசனை செய்வதை
நினைத்தால், எனக்கொன்று தோன்றுகிறது. அதாவது இப்
போது நம்மை எதிரிட்டிருக்கும் அல்லி என்பவளைப்
போராடி வதைத்தால், "ஆவை யொருநூறு பழி செய்த
தொரு ஸ்திரீயை" என்ற நியாயத்தால் நூறு பசுவைக்
[illegible]ன்ற பாபம் வந்து சேர்வதோடு நம்போன்றவரும் அந்
[illegible]ராஜர்களும் பெண்ணோடு மலைந்தவரென்று நகைக்கும்படி
நேரிடுமென தேவரீர் திருவுளத்தில் சஞ்சலமுண்டாயிருக்
கிறதென்று தெரியவருகிறது. அதற்குச் சமானமாக பிரபல
நியாயஞ்சொல்லுகிறேன் கேளுங்கள். "அறிவுடை முதியோ

ரேன்றும் ஆண்டிளையோர்களென்றும், சிறியவர் பெரியவரேன்றும் திருத்தகுவளத்தரேன்றும், வறியவரேன்றும் வீரர் மதிக்கிலர் யாவரேனும், விறல் வலிபடைத்து நேரின் வெஞ்சமர் விளைப்பரன்றே" என்றதால் பெரியவரென்றும், சிறியவரென்றும், செல்வரென்றும், தரித்திரரென்றும், அறிவுடையோரென்றும், மடையரென்றும், மங்கையரென்றும், மைந்தரென்றும் பார்க்கவேண்டியதில்லை. யாவராயிருந்தாலுஞ் சரி. எப்பொழுது தம் வலியைக்கொண்டு எதிரிடலானார்களோ அவர்களை அப்பொழுதே சமர் விளைத்து நிற்கவேண்டியதவசியமாயிற்று. ஆகையால் அடியேனுக்குச் சற்று உத்தரவு கொடுங்கள். நான் அதி விரைவாகச்சென்று என்கையிலுள்ள வில்லை வளைத்துக் கூர்மையான கணைகளைத் தொடுத்து விடுத்து, அல்லியினுடலைச் சல்லடைக் கண்களாக்கி, வாகைமாலை சூடி, வெற்றிச்சங்கை எடுத்து பம்பம் என்று முழக்கி கீர்த்தியை நிலைநாட்டி வருகிறேன் அண்ணா!

தர்:—தம்பி சகாதேவா! அவசரப்படாதே! சற்றுப்பொறு. (கிருஷ்ணரைப் பார்த்து) கோபால கிருஷ்ண பரமாத்மா! இப்பொழுது பாண்டியநாட்டரசி நம் நகரைச்சுற்றி சைனியங்களோடு போருக்குச் சித்தமாயிருப்பதால், பீமனுடன் தாங்களும் சென்று போர்முகத்தில் எவ்விதம் தங்களுக்குச்செய்யச் சித்தமோ அவ்விதம் நடத்திவைக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்:—

கிரு:-பீமனும் நானுந்தானே போய்வரவேண்டும். சரி, பீமா! புறப்படு போகலாம். (போகிறார்கள்)

சகா-அண்ணா! கிருஷ்ண பரமாத்மாவுக்கும் பீமண்ணாவுக்கும் விடைகொடுத் தனுப்பியிருக்கிறீர்கள். அவ்விருவரும் அதிரதவீரர்களாகையால், பிறர் சகாயங் கருதாமல் வெகு விநோதமான போர்செய்து நிற்பார்கள். அதனைப்பார்க்க எனக்கு அவா மேலிடுகிறது. ஆதலால் எனக்கும் சற்று உத்தரவு கொடுக்கவேண்டுமென மிகுந்த தாழ்மையோடு வணங்கிக்கேட்டுக்கொள்ளுகிறேன் அண்ணா!



தர்:— சகாதேவா! அப்படியே போய்வா.

(சகாதேவன் வணங்கிப்போகிறான்)

நகு:— அண்ணா! கோபால கிருஷ்ண பரமாத்மாவுக்கும், பீமண்ணாவுக்கும், தம்பி சகாதேவனுக்கும் அல்லிமீது போருக்குச் செல்லும்படி உத்தரவு கொடுத்தனுப்பியிருக்கிறீர்கள். அம்மூவரும் அதிரத வீரர்கள். அவ்வல்லிக்குத் துணையாக தேவர்கள்வந்து போர் தொடுத்தாலும் விடமாட்டார்கள். ஒருவேளை அந்த அல்லியைக் கொன்றாலும் கொன்றுவிடுவார்கள். அவ்விதம் கொன்றுவிடும்படி நேரிட்டால் பெண்ணைக் கொன்ற பாபம் வந்துசேர்வதோடு நம்போன்ற ராஜர்கள் பெண்ணைக் கொன்றார்களென்று பழிச்சொல் சொல்லும்படி ஏற்படும். ஆகையால் அவ்வித அசம்பாவிதங்களொன்றும் நடவாதிருக்கும்படி செய்வதற்கு நாமும் அங்கே போகலாம் வாருங்கள் அண்ணா! (போகிறார்கள்)

யுத்தகளம்

கிரு:—(அல்லியைப்பார்த்து) அம்மா அல்லி! உன்னுடன் சண்டை போடவேண்டுமோ. அப்படியே ஆகட்டும். ஆனால் எனக்கு அதிகமாகச் சண்டை போடத்தெரியாது. இருந்தாலும் சண்டையில் கெட்டிக்காரனைக் கூட அழைத்துக்கொண்டு வந்திருக்கிறேன். ஊம்.

அல்:—ஆமாம். உனக்கென்ன? மாடுமேய்க்கத்தானே தெரியும்! போர்க்களத்தில் நின்று சண்டையிடத்தெரியுமா! ஊம். நில். உன்னாலானவரையும் பார்!

கிருஷ்ணன் அல்லியுடன் சண்டைசெய்து
முடிவில் பீமனிடம் ஓடுகிறார்.

கிரு:— அப்பா பீமா! என்னாலானவரை பார்த்துவிட்டேன். இனி உன் சாமர்த்தியத்தைப் பார்க்கவேண்டும். இது நாள்வரை நன்றாகச் சாப்பிட்டுவிட்டுப் படுத்து நித்திரைசெய்துகொண்டிருந்தாயே! ஏதோ அவளிடம் உன் வலிமை

யைக் காண்பிவித்து ஜெயம் பெற்று வந்துசேர். ஊம். புறப் பட்டுப்போய் வா!

பீம:— ஆ! ஆ! பரமாத்மா! இதோ போய் ஒரு நிமிஷத்தில் அவளைப் புறமுதுகிடவோட்டி நான் வெற்றியடைந்து வருகிறேன். தாங்கள் இங்கேயே இருந்து பார்த்துக்கொண்டிருங்கள்.

(அல்லியிடம்போய் நிற்கிறான்)

அல்:— அடே! நெய்யையெல்லாம் குடித்தவனல்லவா நீ? இதோ பார். உன் தொந்திவயிற்றைக் கிழித்து அந்த நெய்யையெல்லாம் கீழே சிந்தும்படி செய்கிறேன். நில் சண்டைக்கு!

பீமன் அல்லியின் வாளாயுதத்தாலடிபட்டு தாங்கமுடியாமல் கிருஷ்ணன் நிற்கும் இடத்தைத்தேடி ஓட்டம் பிடிக்கிறான்

பீம:— பரமாத்மா! இனிமேல் இங்கே நிற்கக்கூடாது. வாருங்கள். அதோ தெரிகின்ற ஆலமரத்திலேறிக்கொண்டு நான் அவளிடம் வெற்றிபெற்று வந்த சமாச்சாரத்தையும் அவள் என்னை வாளாயுதத்தாலடித்த அடியையும் கணக்குப்பார்த்துச் சொல்லுகிறேன் வாருங்கள்! வாருங்கள்!! (போகிறார்கள்)

---

புலிக்கூண்டு

சகா:— நான் சாஸ்திரங்களை ஆராய்ந்து பார்த்ததில் அல்லியென்பவள் அயோநிஜையென்றும், ஆலவாய் சொக்கநாதர் அருளேயல்லாமல் மீனாம்பிகையின் பரிபூரண கிருபாகடாக்ஷமுடையவளென்றும், எதிர்நின்று யுத்தஞ்செய்து எவருமிவளை வெல்லமாட்டாரென்றும் நன்கு தெரியவந்தது. ஆகையினாலே, எனது புத்தி நுட்பத்தால் தந்திரமார்க்கத்தை யனுசரித்து இப்புலிக் கூட்டை அமைத்து வந்திருக்கிறேன். அந்த அல்லியென்னும் பெட்டைப்புலி இப் புலிக்கூண்டில் அகப்பட்டால்தான் அடங்கும். இல்லையேல் பஞ்சவரென்னும் எங்கள் பெயரைக் குற்றியலுகரப்புணர்ச்சியாக்கிப் பஞ்சு அவர் எனப்பிரித்துப்



பறக்க அடிக்கும் தடையில்லை. எனக்கு முன் யுத்தத்துக்கு போன இவர்களின் நிலை என்ன விதமாக இருக்கிறதென்று சற்று யோசித்தால், கோபாலகிருஷ்ணபரமாத்மாவோ கபடநாடக சூஸ்திராவதாரி; மாயவித்தை கற்றவர்; ஜெக ஜால வேடிக்கைகாட்டுகிறவர் என்றாலும் அவருடைய கெஜ கர்ணம், கோகர்ணம், இந்திர மகேந்திர ஜாலங்களெல்லாம் அல்லியிடத்திற் செல்லாது. ஆகையினால் மானம் போனாலும் போகிறது, பிராணனிருந்தால் போதுமென உயிர்தப்பிப்பிழைத்து ஓடியிருப்பார். பீமண்ணாவோ அப்படியில்லை! சுபாவத்திலேயே முரட்டுக்குணமுடையவர்; முன்பின் யோசியாமல் கதாயுதத்தைதூக்கிக்கொண்டுகும்பலில் நுழைந்து விடுவார். கரந்துறை படைகள் புறம்பே வளைத்துக்கொண்டு மொத்து மொத்தென்று மொத்தினாலும் சட்டை பண்ணாமற் சண்டையிட்டே நிற்பார். என்றாலும் அவருடைய கெதி அதோகெதியாகவே சண்டை முடிந்திருக்கும். நல்லது அதோ சைனியங்களோடு வரும் அல்லிமாதைக் கவனிக்கிறேன்.

அல்:— (சகாதேவனைப்பார்த்து) அடே நீயார்? வில்லுங்கையுமாக நிற்கிறாய். யுத்தம் செய்ய வந்திருக்கிறாயா!

இராகம்—அடாணா—தாளம்—ஆதி.

சகா:— அல்லியே யுன்னையடக்கச் சொல்லியே ஜெயிக்க வந்தேன் [நானே.
நீ— துள்ளியே வாயாட வேண்டாம் என்னுடன் எதிர்த்து வாராய் தானே. (அ)
ஓடுகின்ற சிங்கமதை யானையு மெதிர்ப்பதுபோல்
நாடு மிந்த நேரமதில் ஓடாமலிங்கு வாராய். (அ)

வ-ம்:— வஸ்திரீயே! கொஞ்சம் நிதானித்து நில். சிற்சிலபேரை புறமுதுகிட ஓட்டினோமென்று கெர்வங் கொள்ளாதே. என்னை இன்னாரென்று தெரியுமா? தருமநந்தனரின் சகோதரர்களில் இளைய சகாதேவனென்று அறிந்துகொள். உனது ஆர்ப்பாட்ட படாடோபங்கள் என்னிடம் பலிக்காது. "பெண்புத்தி பின்புத்தி" என்பதற்கிணங்க சண்டை செய்ய வந்திருக்கலாமென நினைத்து உனது

அபிப்பிராயங்களை யறிந்து சண்டை செய்யலாமென நினைக்கிறேன். ஸ்ரீ ராமபிரான் தாடகையென்னும் அரக்கியைக் கொல்லுவதற்கு ஆலோசனை செய்துகொண்டு நின்றவராகி, பின் விசுவாமித்திரர் சமாதான நியாயஞ் சொல்லக்கேட்டே வதைத்திருக்கிறார். ஆகையால் இப்பொழுது நான் கேட்கும் கேள்விகளுக்குத் தக்கவிடைகள் கொடுக்கவேண்டும். அதற்கு மத்தியில் மனசாக்ஷிக்கு விரோதமில்லாமல் விளங்கப்பட்டாலும், என்னிடம் கேள், அதற்குப் போதுமான சமாதானஞ் சொல்லுகிறேன். அப்படியே போர்தொடங்க வேண்டுமென்றாலும் பின் வாங்குவேனென்று நினைக்காதே! உன் அபிப்பிராய மென்ன?

---

இராகம்—அடாணா—தாளம்—ஆதி

அல்— இந்திர ஜாலம் சொல்லாதடா　　என்கோபமுந்தாளாதடா
என்னிடமெதிர்க்க　　வந்தாயோடா
வில்லை—சொல்லாமலே　　வைத்துவிட்டு
செல்லாவிடி　　லுன்னையிங்கு
சித்திரவதை செய்திடுவேன்　　கேடா　(இ)

அநுபல்லவி

சண்டை செய்ய　　நீ வந்தாயோ
தன் பலமு　　மறிந்தாயோ
தாறுமாறு　　வார்த்தை வேண்டாம்
சாஸ்தியாய் நீ　　துள்ளவேண்டாம்　(இ)

வ-ட்— அடே! நீ சகாதேவனா? சாஸ்திரங்களை நன்றாய்க் கற்றவனா? என்னோடு சண்டைசெய்ய வந்தவனா அல்லது நியாயங்கள் பேசவந்தவனா? உன்னிடத்தில் நான் யாதொன்றும் சொல்ல வேண்டுவதில்லை. படுகளத்தில் வந்து எப்போது நின்று விட்டார்களோ. அப்புறமிங்கே ஒப்பாரியென்னடா? நில் சண்டைக்கு; உன் சாமர்த்தியத்தைப் பார்ப்போம்.



சகா:— ஏ ஸ்திரீயே! வீணாகக் கெட்டுப் போகாதே! நான் சொல்லுகிற வார்த்தையை நன்றாய் ஆலோசித்துப்பார். நீ ராஜ முறை நடத்தும் ராணியல்லவா? எப்பொழுது நீ ஒரு ராஜரீகத்துக் குரியவளாகி விட்டாயோ அப்பொழுதே மநுதர்ம சாஸ்திரத்தை யநுசரித்து நடக்கவேண்டும். மநுவானவர் அரசர்களின் யுத்தத்தைப்பற்றி இருபத்துநான்கு அத்தியாயங்களை மிகு சிறப்பாகச் சொல்லியும், அவ்விஷயம் முடியாததுகண்டு ஏற்குமிடங்களில் பொது விதியாகவும் சொல்லிவைத்திருக்கிறார். அவைகளில் ஒரு வழிக்கும் உன் நிலை யொத்ததாகக் காணப்படவில்லை. ராஜாங்கத்தார் அதாவது, அரசர்கள் ஒருவரை யொருவர் எதிரிட வேண்டுமானால், முன்பு தூது போக்கித் தன்னிலைமைகளுக்கு இன்ன இன்னவித இடையூறுகளை விளைவித்திருக்கிறாயென்றும், அல்லது உன் நடத்தை இத்தன்மையான கெடுதலை உலகத்திற்கு விளைவிக்கக் கூடியதாக இருக்கிறதென்றும் தன்னால் கூடியவரை அவனுக்குப் புத்திபுகட்டி பயன் படாவிட்டால், இன்னகாலத்தில் இன்ன விஷயமாக யுத்தத்துக்கு வருகிறேனென்று தெளிவாய்ச்சொல்லி விட்டுப் போர்தொடங்கவேண்டும். அப்படி தொடங்கிய பின்னும் எதிரிகளினால் வினவப்பட்ட கேள்விகளுக்குத் தக்க பதிலைச் சொல்லிவரவேண்டும். அப்படியில்லாமல் படுகளத்தில் ஒப்பாரியாவென்று தடி முரட்டுத்தனமாய்ப் பேசினால் அது யுத்தமுறையாகுமா? அதிருக்கட்டும். நீ சண்டைக்கு வந்திருக்கிறது இன்னதற்கென்றாவது சொல்லு பார்ப்போம்.

அல்:— என்டா வீணவார்த்தைகளைப் பேசிக்கொண்டு நிற்கிறாய்? என்னிடம் சண்டைக்கு வந்தாயோ கதைகள் படிக்கவந்தாயோ? என் ஆணையைக்கடந்து நெய்யைக்குடித்து வந்தவனை யைப் புடைத்து அனுப்பினேன். அதுபோல் உனக்கும் வேண்டுமானால் தருகிறேன் வாங்கிக்கொண்டுபோ.

சகா:— ஏ ஸ்திரீயே! சற்றாவது மதியாமல் என் வார்த்தைக்குச் சரியான பதிலுஞ் சொல்லாமல் இப்படித் தாறுமாறாகப் பேசினால் நான்

பொறுக்கமாட்டேன். அதிருக்கட்டும். உன் கழுத்தில் யானைத் தலைபோல் தொங்குகிறதே! அது என்ன?

அல்:— என் கழுத்தில் தொங்குவதா? எந்தச் சண்டாளனோ நான் நித்திரை செய்யும்போது இந்தத் தாலியைத் திருட்டுத்தனமாகவந்து கட்டிவிட்டுப் போய்விட்டான். அவனைக் கண்டு பிடித்துக் கொல்லவென்றே வந்திருக்கிறேன்.

சகா:— ஆஹா! பேஷ்!! பேஷ்!!! கழுத்திலே தாலிகட்டிப் போகத் தனக்குப் போதுமான பாதுகாப்பில்லாத நீதானா என்னை யுத்தத்தில் ஜெயிக்கப்போகிறாய்! உன்னை இப்படிக் கௌரவபங்கஞ்செய்து தாலியைக்கட்டி வந்தவர் எனது அண்ணா அர்ச்சுனர்தான். உனக்குத்தகுந்த கணவரும் அவரே! எப்பொழுது பெண்ணாகப் பிறந்துவிட்டாயோ அப்பொழுதே ஒரு புருஷன் வேண்டியது அவசியம். ஆகையால் மரியாதையாக என்னோடு வந்துவிடு; இல்லையேல் வீண் அவமான முண்டாகும். வேறொருவரை நீ மணஞ்செய்து கொள்ளலாமென நினைத்தாலும் முன்னொருவர் மாங்கல்யதாரணஞ்செய்த பெண்ணென்று மற்ற ராஜர்கள் விரும்பமாட்டார்கள் என்ன சொல்லுகிறாய்?

அல்:— அடே! நீதான் இந்நேரம் மநுதர்ம சாஸ்திரத்தைப் பற்றி நியாயம் பேசியவனோ! உனதண்ணன் அர்ச்சுனன் தான் இந்தத் தாலியைக் கட்டியவனோ! நீங்கள் நீதியுடன் ராஜ்யபாரம் நடத்துகிறவர்களோ பலே நன்றாயிருக்கிறது! எந்தச் சாஸ்திரத்தில் திருட்டுத்தாலி கட்டச்சொல்லியிருக்கிறது? அந்த அயோக்கியப்பயலாகிய அர்ச்சுனனா எனக்குப் புருஷன்? மட்டிப்பயல்களே! இன்னுஞ் சற்று நேரத்திற்குள் உங்களெல்லோரையும் நாசஞ்செய்து விடுகிறேன். பார்! நில்யுத்தத்திற்கு!

சகா:— ஏ ஸ்திரீயே! நீ சற்றுவது அறிவில்லாதவள்; யோக்கியதையில்லாதவள்; கருத்தில்லாதவள்; மதியில்லாதவள். இன்னும் சொல்லுகிறேன். கெட்டுப் போகாதே! எப்படியும் நீ



எனதண்ணாவுக்கு மனைவியாகிவிட்டாய். அதனாலேதான் மதினியென்று மரியாதையாகப் பேசினேன். அந்த கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ளாதவளாகி விட்டாய். இருக்கட்டும். உன்னிஷ்டம்போல் நில் யுத்தத்துக்கு!

இராகம்—அடாணா—தாளம் —ஆதி.

பல்லவி.

எண்ணிப் பாராமலே என்ன உளறினை அண்ணி<br>
நீ—உன்னிவாய் பேசாமல் வில்லம்பு பூட்டிவா எண்ணி (எ)

அநுபல்லவி.

நெருப்பில் புழுவந்து அண்டிடில் மீளுமோ<br>
உப்பில்லாமலறு நற்சுவையாகுமோ<br>
விரகாக்கினி மேலாகுது<br>
சரவாக்கினி விடுவேனிது. (எ)

வ-ம்:— சகாதேவன் சண்டை செய்துகொண்டே ஓடிப் புலிக்கூட்டில் நுழைகிறான்; அல்லியும் அவன்பின் செல்லுகிறாள். அது சமயம் பக்கத்திலுள்ள கதவை கிருஷ்ணன் ஓடிவந்து மூடிவிடுகிறார். முன் பக்கத்துக் கதவைச் சகாதேவன் மூடிவிடுகிறான்.

(பாட்டு)

சகா:— அகப்பட்ட திந்த அல்லிப்புலி<br>
இதைப்பார்க்கக் கொடும் ஒரு சல்லி<br>
இகத்தில் பொருத்த நிதன் வலி<br>
இனி சேட்டைப்பண்ணா திந்த எலி (அ)

(கிருஷ்ணன், பீமன், அர்ச்சுனன் வருகிறார்கள்)

பாட்டு

சிந்து தர்க்கம்.

:— அன்பு நிறைந்த எந்தன் அல்லிமனையாளே<br>
அட்டியேனோ சொல்லடி தாலிகட்டினவனடி

வீண் அகங்கார மாகவே ஒன்றும் பேசவேண்டாம்
வந்து என்னைச் சேரடி

அல்:— ஞாய மாகுமா?
அரு:— ஞாய மாகுமே.
அல்:— துன்பம் நேருமே.
அரு:— இன்ப மாகுமே.
அல்:— வம்பு ஏனடா.
அரு:— நம்பி னேனடி.
அல்:— என்னைக் — கள்ளத்தனமாக மெள்ளத்தாலிகட்டிச்
சென்றாயே அது தர்மமா.
அரு:— அது மர்மமே
அல்:— என்னை வெளியிடு
அரு:— உண்மை சொல்லிடு
அல்:— கேடு வந்திடும்
அரு:— என் — இஷ்டம் போலிங்கு வந்த அன்னநடைமானே
சேர்ந்திடு கேடு நீங்கிடும்.

---

அல்:— அடே! திருட்டுப்பயலே! ஏன் வீண்வார்த்தைகள் பேசுகிறாய். இப்போது நான் வெளியில் வந்தால் உன்னைக்கொல்லுவேன். இதோ என் கையில் இருப்பது என்னவென்று நினைத்தாய்?

182857

(இது சமயம் தருமர், நகுலன், வருகிறார்கள்)

தரு:— அம்மா! பாண்டிய நாட்டரசியே! எல்லாம் இனிதாங்கள் எங்கள் மீது மனஸ்தாபம் வைத்துக்கொள்வதால் பிரயோசனமென்ன? இனிமேல் நடக்கும் விஷயங்களுக்கு தாங்கள் மனநிம்மதியடைய வேண்டியதுதான். வேறொன்றுமில்லை.

அல்:— தர்மராஜரே! உமது தம்பியை அடக்கியாள முடியாமல் இப்படி என்னிடம்வந்து சமாதானம் சொல்லுகிறீர். இந்த அக்கிரமச்செய்கை அடுக்குமா? இந்தக்கூ[illegible] ஆனால் நியாயமென்பதை எல்[illegible] அநுசரித்து [illegible] வேண்டியது. ஆனாலும் பர[illegible]யில்லை, என்னை இந்தப்புலிக்